# 1971 முதல் பாடசாலைகள் மூன்று பிரிவாக இயங்கும்!

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

**கவனியுங்கள்!**

வருகின்றது தீபாவளி!
அழைக்கின்றது ,'ராஜ்கோபால்ஸ்''
தீபாவளிப் பண்டிகையைச்
சிறப்புடன் கொண்டாட
'ராஜ்கோபால்ஸ்' ஸ்தாபனத்தாரின்
தரமான ஜவுளிகள் உங்களை மகிழவைக்கும்,
குறிப்பாக விலையம்சம் முற்றிலும்
உங்களைப் பிரமிக்க வைக்கும்.
உங்கள் தரமான ஜவுளித் தெரிவுகளுக்கு

**ராஜ்கோபால்ஸ்**
[பிரபல ஜவுளி மாளிகை]
36/1, பெரியகடை, யாழ்ப்பாணம்.

**ஈழநாடு**

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 241
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் புரட்டாதி 24 ஷஃபான் 8 சனிக்கிழமை (10-10-70)

**தீபாவளி விற்பனை!**

சிறுவர் முதல் பெரியவர் வரை
எல்லோருக்கும் தேவையான
**புடவை வகைகள்**
ஏராளமான டிசைன்கள்
எமது கையிருப்பிலுண்டு.
உங்கள் தீபாவளி தேவைகளை
பூர்த்தி செய்துகொள்ள
முந்துங்கள்.

**ரமணி** ரெக்ஸ்ரைல்ஸ்
66,கே.கே.எஸ்.ரோட், -யாழ்ப்பாணம்

### நிரந்தரக்காரியதரிசி உடகம தகவல்

(கு. வி. மகாலிங்கம்)

யாழ்ப்பாணம், சனி 1971-ம் ஆண்டு தொடக்கம் பாடசாலைகள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படும். கல்வி அமைச்சு இம் முடிவை மேற்கொண்டுள்ளது.

இத்தகவலை கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி கலாநிதி பிரேமதாசா உடகம சமீபத்தில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த போது தெரிவித்தார்.

9-ம் வகுப்புத் தொடக்கம் 12-ம் வகுப்புவரை ஒரு பிரிவும், ஓராம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை மறு பிரிவும் அமையும். சில கிராமியப் புறங்களில் வசதிகள் இல்லாத காரணத்தால் அவ்வூர் பிள்ளைகள் மகாவித்தியாலயங்களுக்குச் செல்ல வாய்ப்பு இல்லாததால், ஓராம் வகுப்பு முதல் 10-ம் வகுப்புவரை உள்ள சில பாடசாலைகள் மற்றொரு பிரிவாக இயங்கும்.

சில பாடசாலைகளில் கனிஷ்ட பிரிவும், சிரேஷ்ட பிரிவும் ஒரே கட்டடத்தில் இயங்கிவரும். இப்படியான இடங்களில் நிர்வாகப் பொறுப்பு கல்லூரி அதிபரிடமே இருக்கும்.

# "சமாதானத்தின் பேரியக்கமாக திகழ்ந்தவர் நாஸர்" —பிரதமர் சிறிமா

## மறைந்த தலைவருக்கு ஆட்சிமன்றத்தில் அஞ்சலி

கொழும்பு, வெள்ளி இன்று நடைபெற்ற ஆட்சிமன்றக் கூட்டத்தில் மறைந்த அரபுத் தலைவர் நாஸருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. நாஸரின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானத்தைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பிரரேபித்தார். எதிர்க் கட்சித்தலைவர் திரு ஜே.ஆர். ஜெயவர்த்தன தீர்மானத்தை ஆதரித்தார்.

அரபு மக்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்ட அதிபர் நாஸர் பரோபகாரத்தின் உதார புருஷர் எனப் பிரதமர் தமது பேச்சில் வர்ணித்தார். அவர் மேலும் பேசியதாவது:

'உலக சமாதானம், பாதுகாப்பு சுபிட்சம் ஆகிய வற்றுக்காகப் பேரியக்கம் நடத்திய அதிபர் நாஸர் ஓர் உலகத் தலைவர். உலக வரலாற்றில் அவர் இடம்பெறுவார். புதிய எகிப்து அவரது நினைவுச் சின்னமாகும். அரபு மக்களின் நினைவிலும் செயலிலும் மிளிரும் மாபெரும் தலைவர் நாஸர். ஆசியா மற்றும் அபிவிருத்தியடையாத நாடுகளின் தலைவர், நிலமானிய முறையைத் தகர்த்தெறிந்து புதிய கொள்கையை விதைத்தவர். அஸ்வான் அணை அவரது சாதனையாகும்'.

உலகத் தலைவர். அவர் மறைவு பேரிழப்பாகும்' என்றார்.

உடுவில் எம் பி திரு வி. தருமலிங்கம் பேசியதாவது:

'அதிபர் நாஸர் அரபு அரசியல் வானில் ஒரு விடிவெள்ளி. 52ம் ஆண்டு இவ் விடிவெள்ளி உதயமாயிற்று. அதன் பின்னர் எகிப்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. எகிப்து மக்கள் புதுவாழ்வு பெற்றனர். 48ல் ராணுவத்தில் சேர்ந்து போராடிய நாஸர், ராணுவத்தில் ஊழலையும் மன்னராட்சியில் டாம்பீகத்தையும் கண்டார். அதனை ஒழிப்பதில் பேராடி வெற்றியும் கண்டார். அவர் ஒரு சோஷலிஸவாதி'.

நல்லூர் எம் பி திரு ஸி. அருளம்பலம் பேசுகையில், நாஸர் இலங்கையின் நண்பரென்றும், பேராசை பிடித்தவர்களையும் ஆதிக்கவெறி பிடித்தவர்களையும் அரபு மண்ணிலிருந்து விரட்டி பல கோடி மக்களுக்கு விமோசனமளித்தவரென்றும் சொன்னார்.

நிதிமந்திரி திரு என் எம். பெரேரா தமது பேச்சில், அதிபர் நாஸர் இஸ்லாமியமும் சமதர்மமும் இணைந்து செயல் படமுடியும் என்ப

### மின்சாரம் தடை

## லாம்புகளுடன் நோயாளிகள் ஆஸ்பத்திரியில் தஞ்சம்

புலோலி, வெள்ளி புலோலிப் பகுதியிலும் பருத்தித்துறை, மந்திகை, வல்வெட்டித்துறைப் பகுதியிலும் இரவில் தினமும் மின்சாரம் இல்லாமலிருப்பதால் பாவனையாளர்கள் அதிருப்தியும் கவலையும் அடைந்துள்ளனர்.

தினசரி மாலை 7 மணியளவில் மின்சாரம் நின்றுவிடுகின்றது.

இதனால் அதிக பணச் செலவில் தங்கள் வீடுகளுக்கும் கடைகளுக்கும் மின்சார இணைப்பையேற்படுத்தியுள்ளவர்கள் மின்சாரத்தின் பயனை அனுபவிக்க முடியாமல் மண்ணெண்ணை

நோயாளர்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகிருர்கள். அங்கு கடமையாற்றும் தாதிமார்கள் மின்சாரம் இல்லாததால் நோயாளர்களுக்கு ஊசிமருந்து ஏற்ற பெரும் கஷ்டப்பட்டு பின் மின்சாரம் இரவு பத்து மணியளவில் வந்தபின் தான் காத்து இருந்து ஊசி ஏற்றவேண்டிய நிலைமைக்குள்ளாகிருர்கள்.

நோயாளர்கள் தங்கள் வாட்டுக்கு வெளிச்சம் இல்லாததால் அயலவர்களின் உதவியை நாடி மெழுகுவர்த்தியைக் கொழுத்தி காலத்தைக் கழிக்கிருர்கள்! பிரசவவேதனையில்இருக்கும்

## பெண்கள் விரும்பினுல் 5 ஏக்கர் நிலம் பெறலாம்

— கிளிநொச்சி எம். பி.

கொடிகாமம், வெள்ளி உங்கள் குடியேற்றத் திட்டத்திலுள்ள சிலவசதியீனங்

இங்கிலுள்ள பெண் பிள்ளைகளின் நிலப்பற்று ... வேண்... பெண் பிள்ளைகள்

# வேலையற்றோர் பிரச்னைக்கு திட்டம் தயார்

### ஆட்சிமன்றக் குழுக் கூட்டத்தில் பிரதமர் தகவல்

கொழும்பு, வெள்ளி வேலையில்லாப் பிரச்னையைத் தீர்ப்பதில் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தி வருகின்றதென்றும் இது சம்பந்தமாக திட்டங்கள் பரிசீலனை செய்யப்பட்டுத் தயார் நிலையில் உள்ளதாகவும் பிரதமர் திருமதி சிறிமா இன்று தெரிவித்தார், இன்று காலையில் நடைபெற்ற ஆட்சிமன்றக் குழுக் கூட்டத்தில் எம் பி.க்களின் கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கையில் பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

படித்துவிட்டு வேலையின்றியிருக்கும் வாலிபர்களில் பத்தாயிரம் பேருக்கு உடன் வேலை வாய்ப்பு அளிக்கவேண்டுமென்றும், இதில் ஐயாயிரம் பேருக்கு ஆசிரியத் தொழில் வழங்க வேண்டுமென்றும் மற்றும் ஐயாயிரம் பேருக்கு அரசாங்கத்தில் வேறு தொழில்கள் வழங்க வேண்டுமென்றும் பல எம். பி.க்களும் பிரதமரிடம் வற்புறுத்தினர்.

## துல்கிரிய ஜவுளி ஆலை தீவிபத்து: சதிவேலையெனச் சந்தேகம்!

கோட்டை, வெள்ளி துல்கிரிய தேசிய ஜவுளி ஆலையில் நடைபெற்ற தீ விபத்திற்குச் சதி வேலையே காரணமாக இருக்கலாமென பொலிஸார் நடாத்திய புலன் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இச் செயலை அப்பகுதியிலுள்ள சமூக விரோதிகளே செய்திருக்க வேண்டும் என பொலிஸார் நம்புகின்றனர்.

சென்ற அரசாங்க காலத்தில் ஆள் சேர்க்கும் பொழுது அரசியல் தலையீடுகள் அதிகமாக இருந்தமையால் இவ்விதமான பகைமை ஏற்பட்டிருக்கலாமென சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாலையில் ஏற்பட்ட தீவிபத்தால் ...

......

## ரஷ்யாவிற்கு இலங்கைத் தூதுவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவில் தங்கள் வீடுகளு க்கும் கடைகளுக்கும் மின் சார இணைப்பையேற்படுத்தி யுள்ளவர்கள் மின்சாரத் தின் பயனை அனுபவிக்க முடியாமல் மண்ணெண்ணை விளக்குகளையே நாடவேண் டியுள்ளது.

மந்திகையில் உள்ள அர சினர் ஆஸ்பத்திரியிலும் மின்சாரம் இல்லாததால் வாட்டுக்கு வெளிச்சம் இல் லாததால் அயலவர்களின் உதவியை நாடி மெழுகு வர்த்தியைக் கொழுத்தி காலத்தைக் கழிக்கிறார்கள். பிரசவவேதனையில் இருக்கும் தாய்மார்களுக்கு உறவினர் கள் தங்கள் வீடுகளிலிருந்து கை லாம்புகள் கொண்டு வந்து இரவைக் கழிக் கிறார்கள்.

# 5 ஏக்கர் நிலம் பெறலாம்

— கிளிநொச்சி எம். பி.

கொடிகாமம், வெள்ளி

உங்கள் குடியேற்றத் திட் டத்திலுள்ள சிலவசதியீனங் களை நான் நன்ருக உணரு கின்றேன். அவற்றிற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்க முயற்சிப்பேன்.'

இவ்வாறு மிருசுவில் படி த்தபெண்கள் குடியேற்றத் திட்டத்தில் நடந்த வரவேற் புக் கூட்டத்தில் கிளிநொச் சித் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் வீ. ஆனந்தசங் கரி கூறினார். அவர் மேலும் தொடர்ந்து பேசியதாவது: 'மேலதிகாரிகள் சிலர் இங் குள்ள நிலைபற்றி எனக்குக் கூறியிருக்கின்றனர், நான் இங்கிருக்கும் பெண் பிள்ளை களின் நிலைபற்றி நன்கறி வேன். பெண் பிள்ளைகள் விரும்பினால் ஐந்து ஏக்கர் தென்னைச் செய்கைக்குரிய நிலத்தை எடுத்துத்தர முயற்சி செய்கிறேன். இன் றேல் மூன்று ஏக்கர் நீர்ப் பாசன வசதியான காணியை எடுத்துத்தர முயற்சிக்கி றேன்.'

இக் கூட்டத்திற்கு குடி யேற்றத் திட்டப் பொறுப் பாளர் தலைமைவகித்தார். கூட்டத்தில் குடியேற்றத் திட்டப் பெண்கள் தம்குறை கள் சிலவற்றை எடுத்துப் பேசினர்.

நாடுகளின் தலைவர், நில மானிய முறையைத் தகர்த் தெறிந்து புதிய கொள் கையை விதைத்தவர். அஸ் வான் அணை அவரது சாதனை யாகும்'.

ஏகாதிபத்தியத்தின் எதிரி யான அதிபர் நாஸர் மறை ந்த தலைவர் நேரு, டிட்டோ முதலியவர்களு டன் பங்குகொண்டு நடு நிலைமைக் கொள்கைகளை வகுத்தார் எனப் பிரதமர் சொன்னார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு ஜே. ஆர். ஜெயவர்த் தன தீர்மானத்தை அனு மதித்துப் பேசுகையில்' அரபு மண்ணிலிருந்து வெளிநாட் டார் ஆதிக்கத்தை ஒழித்துக் கட்டியவர் நாஸர். அவர் ஓர் சன மனிதவரென்றும் சொன்னார்.

நிதிமந்திரி திரு என் எம். பெரேரா தமது பேச்சில், அதிபர் நாஸர் இஸ்லாமிய மும் சமதர்மமும் இணைந்து செயல் படமுடியும் என்ப தில் நம்பிக்கை வைத்திருந் தார் எனச் சொன்னார்.

நிலமான்ய முறையை நாஸர் இராணுவப் புரட்சி மூலம் ஒழித்துக் கட்டினா ரென்றும், அவர் நடத்தி யது தேசியப் புரட்சியென் றும் வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர்கெனமன் பேசுகையில் கூறினார்.

கல்வி அமைச்சர் அல் ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் பேசுகையில் இஸ்லாமிய மும் சமதர்மமும் வேறுபட் டவையெனச் சிலர் கூறிய பொழுதிலும் இவை இரண் டிலும் அதிபர் நாஸர் ஒரு மைப்பாட்டைக் கண்ட வரென்றும், அவர் நடத் திய அரசியல் சமுதாயப் புரட்சி மூலம் சரித்திரத் தையே மாற்றியமைத்தார் என்றும் கூறினார்.

உபசபாநாயகர் ஐ ஏ காதர் தலைமையில் ஆட்சி மன்றக்கூட்டம் நடைபெற் றது.

நிய புலன் விசாரணையில் தெரியவந்துள்ளது.

......

## ரஷ்யாவிற்கு இலங்கைத் தூதுவர்

கோட்டை, வெள்ளி

கொழும்பு பிரபல வழக் கறிஞரான மைக்கேல் சிறி வர்த்தன ரஷ்யாவில் இலங் கைத் தூதுவராக நியமிக் கப்பட்டுள்ளார்.

இவர் ஸ்ரீலங்கா வழக்கறி ஞர் சங்கத்தின் தலைவராக இருந்தார். அண்மைக் கால த்தில் செனட்சபை உறுப் பினராகவும் இருந்தார்.

......

## ஆர். ஜி நாடு திரும்பினார்

கோட்டை, வெள்ளி

லண்டனில் சிகிச்சை பெறச் சென்றிருந்த திரு. ஆர். ஜி. சேனநாயக்கா இன்று நாடு திரும்பினார். அவருடன் அவரது மனைவி யும், வைத்திய ஆலோசக ரும் சில வாரங்களுக்கு முன் னர் லண்டன் சென்றிருந்த னர்.

நில் ஆள் சேர்க்கும் பொ ழுது அரசியல் தலையீடுகள் அதிகமாக இருந்தமையால் இவ்விதமான பகைமை ஏற்பட்டிருக்கலாமென சந் தேகம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாலையில் ஏற்பட்ட தீவிபத்தால் கிட்டத்தட்ட 10 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டிருக்கலாமென தற் காலிகமாகக் கணக்கெடுக் கப்பட்டுள்ளது.

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் உதவியுடன் 24 கோடி ரூபா செலவில் இவ் ஜவுளி ஆலை கட்டப்பட் டது. இத்தீவிபத்துப்பற்றி தொடர்ந்தும் புலன் விசா ரணை நடைபெற்று வருகி றது.

......

## கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

ரம்ழான் பெருநாளை யொட்டி முஸ்லிம் மக்களு க்கு (பங்கீட்டரிசிக் கூப்பன் களுக்கு) மில்சாட் அரிசி வழங்கும்படி யாழ். மாநகர சபை அங்கத்தவர் ஜனாப் எம். ஏ. சி. ஏ. காதர் யாழ். உதவி உணவு கட்டுப் பாட்டு அதிகாரியைக் கோரி யுள்ளார்.

---

கொழும்புத்துறை

# ஆசிரிய கலாசாலை அதிபருக்கு பாராட்டு

திருநெல்வேலி, வெள்ளி

1970ம் ஆண்டுக்குரிய ஆசி ரிய ஆலோசகர் வகுப்பு கடந்த 9மாதங்களாக யாழ் ப்பாணம் பாரதி பாஷிய பாடசாலையில் நடந்துநிறை வேறியதைஒட்டிபிரிவுபசார வைபவம் ஒன்று கொழும் புத்துறை ஆசிரியகலாசாலை யில் 6-10-70ல் சிறப்பாக நடந்தது. இவ்வைபவத் தில் வடமாகாண கல்வி அதிபதி திரு. சங்கரலிங்கம் பிரதம விருந்தினராகக் கல ந்து கொண்டார். மேற்படி வகுப்புக்களில்விரிவுரையாற் றிய கொழும்புத்துறை ஆசி ரிய பயிற்சிக்கலாசாலை அதி- பர் திரு' சி. விசுவலிங்க த்தின் கடமை உணர்ச் சியும் திறமையும் பற்றி பயிற்சியில் பங்கு பற்றிய ஆசிரியர்கள் பாராட்டுரை வழங்கினர்கள்.

வடமாநில அதிபதி திரு. சங்கரலிங்கம் பேசுகையில், வழிப்படுத்தலில் ஈடுபடுகி ன்ற ஆசிரியர்கள்நேர்மைக்கு முதலிடம் கொடுக்க வேண் டுமென்றும், உண்மையாக நடப்பதன் மூலம் உயர்வ டையலாம் என்றும் கூறினார்

சங்கச் செயலாளர் திரு, நா. சோதிலிங்கம் நன்றி உரை கூறினார்.

# 'சுதந்திரக்கட்சியை ஆதரித்து சகோதரர்களாகவாழ்வோம்'

## வல்வெட்டியில் துரைராசா

வல்வெட்டித்துறை, வெள்ளி

'தமிழ் பேசும் மக்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட் சியை நேரடியாக ஆதரிப் பதன் மூலம் தமது உரிமை களைப் பெற்று, இந்நாட்டில் வாழும் பெரும்பான்மை இனமான சிங்கள மக்களு டன் வாழ்வோம் என்று நாம் கூறினால், 'அடிமைக ளாக வாழ்வதா என்று இங்குள்ள உதிரிக்கட்சி யொன்று கேட்கிறது. இனத் தைப் பிளவுபடுத்தி அரசி யல் வாழ்வு நடத்துபவர் கள் அவர்கள். தேசிய ஒற் றுமை ஏற்பட ஒற்றுமைப் பட்டு அரசாங்கத்தை ஆத ரிப்போம்'

இவ்வாறு வடபிராந்திய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு. எம். துரைராசா பேசுகையில் குறிப்பிட்டார்.

வல்வெட்டியில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கிளை அங்கு ரார்ப்பணக் கூட்டத்தில் திரு. எம். துரைராசா தலைமைவகித்து உரை நிகழ் த்தினார்.

அவர் மேலும் பேசுகை யில், காலஞ்சென்ற பிரத மர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா தமிழர்களுடன் நேசமாக வும் அன்பாகவும் வாழ விரும்பினார். அதனால்தான் செல்வா-பண்டா ஒப்பந்தம் உருவானது' என்று கூறினார்

வடபிராந்திய சுதந்திரக் கட்சி அமைப்பாளர்களில் ஒருவரான திரு. எம் நட ராசா பேசுகையில், 'தமிழ் தமிழ் என்றுகூச்சல்போட்டு அரசியல் பிழைப்பு நடாத்தி யவர்களால் எமக்கு எவ்வித பிரயோசனமுமில்லை என் பதை மக்கள் உணர்ந்து விட்டனர். பொருளாதார சுதந்திரம் பெற முனைந்து விட்டார்கள்' என்றார்.

வல்வெட்டி பட்டின சபைத் தலைவர் திரு. நா. பாக்கியலிங்கம்பேசுகையில், தனிப்பட்ட சலுகைக்காக இந்த சுதந்திரக் கட்சிக் கிளையை நாம் ஆரம்பிக்க வில்லையென்றும், தேசிய ஒற்றுமைக்காகவும், ஊரின் முன்னேற்றத்துக்காகவும் இதனை ஆரம்பிக்கிறோம் என்றும் கூறினார்.

திரு. குழந்தைவேலு இராஜகோபால் பேசுகை யில், வல்வெட்டி சைவப் பாடசாலை மகாவித்தியா லயமாக உயர்த்தப்பட வேண்டுமென்றும், வல் வெட்டி உபதபால் நிலையத் துக்கு தொலைபேசி செய்து தரப்படவேண்டுமென் றும் கேட்டுக்கொண்டார்,

வல்வெட்டி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கிளையின் தலைவராக திரு. குழந்தை வேலு இராஜகோபாலும், காரியதரிசியாக திரு. க கிருஷ்ணசாமியும், தனாதி காரியாக திரு கு தங்க வேலாயுதமும் தெரிவுசெய் யப்பட்டனர்.

---

மன்னார் கொலை வழக்கு

# 1-ம் எதிரிக்கு 7 வருட கடூழியம் 2-ம் எதிரிக்குசிறையும்அபராதமும்

யாழ்ப்பாணம், சனி

மன்னார் கொலை வழக்கில் 1-ம் எதிரிக்கு 7 வருட கடூழியசிறைத் தண்டனை யும் 2-ம் எதிரிக்கு 3 வருட கடூழிய சிறைத்தண்டனை யும் 1000 ரூபா அபராத மும் விதிக்கப்பட்டது. அபராதம் கட்டத்தவறினால் 18 மாத சாதாரண சிறைத் தண்டனை யென்றும் தீர்ப் பில் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் கொலை வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட் டில் நீதியரசர் ஓ. எல். டி. கிரெஸ்டர் முன்னிலையில் நேற்று இரண்டாவது தின மாக விசாரணை செய்யப் பட்டது.

விசாரணை நடுவில் 1-ம் எதிரி கைமோசக் கொலைக் குற்றத்தையும் காயம் விளை வித்தகுற்றத்தையும் ஒப்புக் கொண்டார் 2-ம் எதிரி கைமோசக் கொலை முயற் சிக் குற்றத்தை ஒப்புக் கொ ண்டார் இதைத்தொடர்ந்து தீர்ப்பு வழங்கப்பட்டது

இவ்வழக்கில் 68-ம் ஆண்டு அக்டோபர் 21 ம் தேதி மன்னாரில் 1-ம் எதிரி யான அந்தோனி சவரியப்பு சாந்தன்மார்க் என்பவர் அந்தோனி குருசை கொலை செய்ததாகவும் அதேநேரத் தில்மத்தியூஸ்சூசைக்கு கா யம்விளைவித்ததாகவும்அதே நேரம் 2-ம் எதிரியன பர்ண ந்துபீரிஸ் என்பவர் பிரான் சிஸ்பாக்கியத்தை கொலை செய்ய முயற்சித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந் தது.

எதிரிகள் சார்பில் அட்வ கேட் ஜே. ஏ. பி. செபிரும் புறக்டர் சிமான்பிள்ளையின் அனுசரணையுடன் ஆஜரா னார் எதிரிகளுக்காக அரசாங் கத்தால் புறக்டர் டபிள்யூ. எஸ். செந்தில் நாதன் நிய மிக்கப்பட்டிருந்தார்.

2-ம் எதிரி 1000 ரூபா அபராதத்தையும் மாதத் தவணையில் 100 ரூபா வீதம் கட்டும்படியும் இப்பணம் காயமடைந்தவருக்கு வழங் கப்படும் என்றும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்குது

1-ம் எதிரிக்கு கைமோ சக் கொலைக்குற்றச் சாட்டு க்கு 7 வருட கடூழியசிறைத் தண்டனையும் காயம் விளை வித்தகுற்றச்சாட்டுக்கு 2 வருட கடூழிய சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டு இரு தண்டனைகளும் ஏககா லத்தில் அனுபவிப்பார் என்றும் தீர்ப்பில் தெரிவிக் கப்பட்டது.

1-ம் எதிரிக்கு தீர்ப்பளிக் கையில் நீதியரசர் கூறிய தாவது: ஆயுதமற்று நிரா யுதபாணியாக நின்றவர் களிடம் கத்திபாவிக்க என்ன தேவை இருக்கிறது மனிதர், மனிதருடன் சணடைபிடிக்க கடவுள் கைகளையும் கால்களையும் படைத்திருக்கும் போது என்னத்திற்காக கத்தியை பாவித்தீர் பிறகும் வந்து இளம் வயதினராகையால் கருணை காட்ட வேண்டும் என்று சொல்லக் கூடாது நீர் 2 வருடம் விளக்க மறி யலில்இருந்ததையும்கவனத் திற்கு எடுத்துக் கொள்கி றேன் இது ஒழுங்கு முறைய ற்ற செயல் என்று தெளி வாகிறது. செய்ததவறை உணர்ந்துகொண்டு குற்ற த்தை ஒப்புக்கொண்டதை யும் கவனத்திற்குக்கொண்டு தண்டனை விதிக்கிறேன்.

2-ம் எதிரிக்கு தீர்ப்பளிக் கையில் நீதியரசர் கூறிய தாவது: நீர் அவரை குத்தி யது என்ன காரணத்திற்கு என்று தெரியவில்லை, நீர் அந்தக் கிராமத்து வாசியு மல்ல; வேறு கிராமத்தவர் அந்த சண்டையில் ஏன் அதைச் செய்தீர். சண் டையை முதல் ஆரம்பித்து வைத்தது நீர்தான். அதன் பின்தான் மற்றவை தொட ர்ந்து நடந்தது. நீர் குத்தி யவரை, திறமசாலியான வைத்தியர் காப்பாற்றிய தால் நீர் அதிர்ஷ்டசாலி யானீர் இல்லாவிடில் நீரும் கொலைக் குற்றச்சாட்டுக்கு ஆளாயிருப்பீர். சம்பவம் சடுதியாக நடந்ததென்ப தையும் கவனத்திற்கு எடுத் துக் கொள்கிறேன். 1 வரு டம் விளக்கமறியலில் இரு ந்ததையும் கவனத்திற்கு எடுத்து தண்டனை விதிக்கி றேன்.

அசைஸ்நீதிமன்றம் இன்று காலைவரை ஒத்திபோடப் பட்டுள்ளது.

---

# "காமராஜர் கட்டளையிட்டால் உயிரையும் அர்ப்பணிக்கதயார்!"

## நடிகர் சிவாஜிகணேசன் முழக்கம்

சென்னை, அக். 9

தலைவர் காமராஜ் இடும் கட்டளையை நிறைவேற்ற உடலில் கடைசி சொட்டு ரத்தம் உள்ளவரை பாடுபடு வோம் தேவைப்பட்டால் உயிரையும் அர்ப்பணிக்கத் தயார் என்று கலைவள்ளல் சிவாஜி கணேசன் தமது பிறந்தநாள் விழாவில் தமது லட்சக்கணக்கான ரசிகர் சார்பில் சூளுரைக்க அதை ஆமோதித்து கடலென திரண்டிருந்த மக்கள் வெள் ளம் உணர்ச்சிப் பிழம்பாக 'தயார்' 'தயார்' என்று வீர முழக்கமிட்டு விண்ணதிர கரகோஷம் செய்த நிகழ்ச்சி சென்னையில் நடந்தது.

எஸ். ஐ. ஏ. ஏ. திடலில் நேற்று நடைபெற்ற அகில இந்திய சிவாஜி ரசிகர் மன் றப் பேரவையில். தமது பிறந்தநாள் விழா பாராட்டு தலுக்கு நன்றி தெரிவித்து கணேசன்பேசுகையில் கூறிய தாவது:

பாரதத்தை காப்போம் என்னும் உறுதி எடுத்து தலைவரின் லட்சியத்தை நிறைவேற்ற உறுதி கூறத் தான் இந்தக் கூட்டம். தலை வர் கூறியதை நாம் மறக்கக் கூடாது மறக்கவும் மாட் டோம்

தலைவர் இங்கே கூறிய கருத்தை நாடு பூராவும் கூறி உணரச் செய்வோம். இங்கிருந்து ஊர் திரும்பு வோர் வீடு திரும்புவோர் ஒவ்வொருவரும் ஒருவர் பத்து பேருக்கு பத்து பேர் நூறு பேருக்கு நூறு பேர் ஆயிரம் பேருக்கு ஆயிரம் பேர் நாட்டிற்கே தலைவரின் கருத்தைகூறிமக்களை உணரச் செய்து தேசத்திற்குள்ள ஆபத்தை தடுத்து நிறுத்து வோம் அதுவே நம்முன் இன்று முதல் உள்ள பணி யாகும்.

இப்படி பிரமாண்டமா கக் கூடி எனக்கு பாராட்டும் வாழ்த்தும் தெரிவித்ததற் கும், என்னை வாழ்த்திய தலை வருக்கும் இந்த விழா சிறப் பிக்க பாடுபட்ட அண்ணா மலை, குருமூர்த்தி மற்றும் காங்கிரஸ் மகாசபையின் வீரர்களுக்கும் என் நன் றியை கூறிக்கொள்கிறேன். என் இதய அடித்தளத்தி லிருந்து தோன்றி வழியும் கண்ணீரை நன்றிக் காணிக் கையாகத் தருகிறேன்.

# மந்திகை ஆஸ்பத்திரியில் மருந்துத் தட்டுப்பாடு

புலோலி, வெள்ளி

மந்திகை அரசினர் ஆஸ் பத்திரியில் கடந்த ஒரு மாத காலமாக நோயாளர்களுக் குக் கொடுக்கும் மருந்து வகைகளுக்குப் பெரும் தட் டுப்பாடு ஏற்பட்டுள்ளதா கப் புகார் தெரிவிக்கப்படு கிறது.

பல மைல்களான குடத் தனை, அம்பன், நாகர்கோயி லிலிருந்து மருந்து எடுக்க வரும் நோயாளிகள் மருந்து இல்லாததால் பெரும் கஷ் டத்திற்குள்ளாகித் தனியார் வைத்தியசாலையை நாட வேண்டிய நிலைக்கு ஆளா கிறார்கள். ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களுக் கும் கொடுக்க மருந்து இல் லாததால் ஆஸ்பத்திரி டாக்டர்கள் வெளியில் மருந்து எடுத்துவரும்பல நோயாளர்களை வற்புறுத்து கிறார்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### வாடகைக்கு

கன்னுதிட்டிச் சந்தியிலிருக்கும் (R. G. பில்டிங்) கட்டிடத்தில் இரண்டு கடைகள் மட்டும் வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு: "ராஜ்கோபால்ஸ்", 36/1, பெரியகடை, யாழ்ப்பாணம். போன்: 7168. 2404

### விற்பனைக்கு

வேன்:

நல்ல நிலைமையிலுள்ள C E. 9000 தொடர்பிலக்கமுள்ள சிவிலியன் சவ்லட் வேன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: மொடேர்ன் பேணிச்சர், 79/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். போன்: 7364. 2320

வீடு கட்ட, யந்திரசாலைகள் அமைக்க சிறந்த காணி 24 பரப்பு சுமார் 150 தென்னை மரங்களும் ஓர் நல்ல தண்ணீர் கிணறும் அடங்கியதாய் யாழ். மாநகரசபை எல்லையுள் நாயன்மார்கட்டில் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. வீ. தயாபரன், 10, குமாரவீதி, நல்லூர். 2996

ராக்ரர்

25 சிறி 7500 தொடர் இலக்கம் 770 டேவிட் பிறவுண் ராக்ரர் 44 சிறி 7500 தொடர் இலக்கம் ரிப்லிங் இரும்புப்பெட்டி றெயிலரும் விற்பனைக்குண்டு பினன்ஸ் வசதிகளும் உண்டு விபரங்களுக்கு நேரில், க. தருமலிங்கம், 330, நாவலர் ரோட், நல்லூர். 2324

### தேவை

அப்பளம் தயாரிப்பாளர் தேவை. 15-10-70 வியாழக்கிழமைக்கு முன்னதாக நேரில் வரவும். திறமைசாலிகளுக்கு முதலிடம் அளிக்கப்படும். சுதர்சனன் இன்டஸ்றீஸ், 217/3, கடைச்சாமி கோயில் லேன், நீராவியடி, யாழ்ப்பாணம். 2321

உதைபந்தாட்டம்

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், சனி

கொழும்பு சென். பெனடிற் கல்லூரியின் உதைபந்தாட்டக் கோஷ்டியும், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் உதைபந்தாட்டக் கோஷ்டியும், இன்று சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் மாலை 4-30க்கு மோதுகின்றன.

(தே. நி)

### ஏலவிற்பனை

36 பழைய இரும்புத்தூண்கள் 17-10-70 சனிக்கிழமை காலை 10-00 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். மேற்படி தூண்களை யாழ் மாநகரசபை வளவிற்குள் பார்வையிட்டுக் கொள்ளலாம். மேலதிக விபரங்களைக் களஞ்சியப் பொறுப்பாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. ரி. சுந்தரம்,
ஆணையாளர்,
யாழ்ப்பாண,
மாநகர சபை.

மாநகர சபை,
யாழ்ப்பாணம்.
8-10-70 2503

யாழ். மாநகரசபை

### கேள்வி அறிவித்தல்

கீழ்க்காணும் வேலைசெய்வதற்கு யாழ் மாநகரசபையில் கட்டிட ஒப்பந்தக்காரராகப் பதிவுசெய்துள்ளவர்களிடமிருந்து 18-10-70 நண்பகல் 12-00 மணிவரை கேள்விகள் என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும்.

பட்டுவெளி வாய்க்கால் அணைச்சுவர் பக்கம் வீதிக்கு மண்போட்டு நிரப்புதல்—530' x 10' x 3'.

கேள்விக்காரர் அனைவரும் கேள்விகள் திறக்கப்படும் 18-10-70 பி. ப. 3-30 மணிக்கு எனது அலுவலகத்தில் சமுகமளிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

யாழ். மாநகர மராமத்துப் பொறியியலாளரிடம் 16-10-70 நண்பகல் 12-00 மணிவரை ரூபா 25/- கேள்வி வைப்புப்பணமாகவும் ரூபா 5/- படிவப் பெறுமதியாகவும் செலுத்திப் பெறப்படும் படிவத்தில் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விக்காரர் ஒப்பந்தம் செய்துகொண்டதும்கேள்வி வைப்புப்பணம் மாத்திரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

எல்லாக் கேள்விகளும் அரக்குமுத்திரை யிடப்பட்டு இணைப்பிரதிகளுடன் கூடியதாக இருத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மூலையில் என்ன வேலைக்கென்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

மேல் விபரங்களை மராமத்துப் பொறியியலாளரிடம் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகரசபை ஆணையாளர்

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
6-10-70. 2504

# சிங்களவர் தமிழர்க்கிடையிலுள்ள பாரம்பரிய தொடர்புகள்

## சரஸ்வதி பூஜையில் விளக்கம்

கோட்டை, வெள்ளி

சிங்களவர்களுக்குத் தமிழர்களைவிட மிக நெருங்கிய தொடர்புடைய வேறு எந்த இனமும் முழு உலகத்திலுமே கிடையாது என்று வாதுவ மகாவித்தியாலய அதிபர் திரு. டி. டி. நாணயக்கார, அண்மையில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற கலைமகள் விழாவில் பேசுகையில் கூறினார்.

கல்வித் திணைக்களத்தின் ஆதரவில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு ஆணையாளர் திரு டபிள்யூ ஆனந்த ஜயவர்த்தன தலைமைவகித்தார்.


திரு நாணயக்கார மேலும் கூறியதாவது:

"தமிழர்களாகிய நீங்களும், சிங்களவர்களாகிய நாங்களும் மிகவும் நெருங்கிய தொடர்புடையவர்கள். சரஸ்வதி பூசையில் மாத்திரமின்றி, பல விஷயங்களிலும் நமக்கு ஒற்றுமை இருக்கின்றது. சிங்களவர்களுக்குத் தமிழர்களைவிட நெருங்கிய தொடர்புடைய வேறு எந்தச் சாதியும் முழு உலகத்திலுமே இல்லை. பாஷையிலும் அவ்வாறே. பழைய அரசர்கள்காலத்தில் இந்தத் தொடர்பு மேலும் நெருக்கமாக இருந்தது. அன்பு அதிகமாக இருந்ததால் பல வேளைகளில் சண்டையும் போட்டார்கள். நெருக்கமாக உள்ளவர்களுக்கிடையில்தான் சண்டையும் ஏற்படும். இது இயற்கை. பாஷையில் மாத்திரமே சிறிது மாற்றம் இருக்கின்றது. எனவே நாம் தொடர்ந்து ஒற்றுமையாக வாழ விரும்பினுல் சமஷ்டியைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பது அல்ல. ஒவ்வொரு சிங்களப் பாடசாலையிலும் இரண்டாவது பாஷையாகத் தமிழும், தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களமும் கட்டாய பாடமாகப் படிப்பிப்பதற்காக ஒழுங்கு செய்வதுதான். இதைவிட நமக்கிடையில் நட்பை வளர்ப்பதற்கு வேறு வழியில்லை. ஒவ்வொருவரும் மற்றவரின் பாஷையைப் புரிந்துகொள்ள முயலுதல்வேண்டும். இதை ஆரம்பித்தால் இன்னும் 10 ஆண்டுகளில் நமக்குள் பிரச்னைகளே இருக்கமுடியாது. இதற்குத் திருமகள் அருள்புரியவேண்டும் என்று பிரார்த்தனை செய்கிறேன்."



படம் 'சிட்டு'

புதிய சமாதான நீதவானுகப் பதவிப் பிரமாணம் செய்த திரு. சிவயோகநாதன் நீதிமன்றத்திலிருந்து வெளியே வந்தபோது அவரது நண்பர்கள் வரவேற்றபோது எடுத்த படம் இது. இன்று வை. எம். சி. ஏ. யில் நண்பர்கள் அவருக்கு விருந்துபசாரமளிக்கின்றனர்.



## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### சனி 10—10—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6.30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 சித்திரம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 ஓடிவிளையாடுபாப்பா.

இரவு6-10 பேச்சு, 6-15 வயலின்6-30 விவசாய நிகழ்

# செய்திச் சுருக்கம்

**கோரிக்கை**

நல்லூர், வெள்ளி

வசாவிழான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாசாலையில் இடநெருக்கடி ஏற்பட்டிருப்பதினுல் மாணவர்கள் பெரிதும் கஷ்டப்பட்டுள்ளார்கள். இது விசயத்தில் உடன் நடவடிக்கை எடுக்குமாறு பாடசாலை பெற்ருேர் கோப்பாய் எம். பி, திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளையிடம் முறையிட்டுள்ளனர்.

## இன்றைய பலன்

புரட்டாதிமாதம்24-ந்திகதி (10-10-70)

மேஷம்- வாகனச் சொந்தக்காரர்களுக்கு வருமானப் பெருகும். சிலருக்கு ஆராய்ச்சிகளிலும் ஆர்வம் பிறக்கும்.

ரிஷிபம்- மக்கள் செல்வாக்கு மனதை குளிர வைக்கும். எண்ணியது எண்ணியபடி நடக்கும் அதிர்ஷ்ட தினம்.

மிதுனம்- அதிகாரக்குறைவுக்கு இடமுண்டு. அபாரகரமான தொழில்களில் ஈடுபடுவர்கள் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

கடகம்-களஸ்திரவழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு. பிரிந்தவர்கள் மீண்டுப் வாழ்க்கையில் இணைவர் பொன்னுன தினம்.

சிம்மம்- சிரித்துப் பேசியவர்கள் இன்று சீறிவிழுவார்கள். சிலருக்குப் பதவி ஏற்றமும் தடைப்படலாம்.

கன்னி- தக்க சமயத்தில் தந்தையின் ஆதரவு கிடைக்கும். தெய்வநம்பிக்கை மேலிடும். இன்று முன்னணியில் நிற்பீர்கள்.

துலாம்- பயன்தரும் பிரயாணமொன்று மேற்கொள்ளப்படலாம், வெளியிடத் தொடர்புகள் பெருகும். முன்னேற்றமான தினம்

விருட்சிகம்-புதியகோணத்திலிருந்து பொருள்வரவுக்கு இடமுண்டு. பொதுசனத் தலைமையுடன் புகழும் தேடி வரும்.

தனுசு- மனதில் விரக்தி நிலை தென்படும். உடல் நலமும் பாதிக்கப்படலாம். கால்நடைகளினுல் நஷ்டம் ஏற்படும்,

மகரம்- ஒளிபரப்பும் வாழ்க்கை. உறவினர்கள் மத்தியில் ஒற்றுமைமலரும் பொன்னுன தினம்,

கும்பம்- கனிவான நினைவுகள் தலைதூக்கும். காதல்

**கலைவிழா**

வடமராட்சி சைவமங்கையர் கழகம் திருக்கேதீஸ்வர திருப்பணிக்காக இம்மாதம் 27-ம்28ம்திகதிகளில்பருத்தித்துறை பெண்கள்பாடசாலை மண்டபத்தில் கலைவிழா ஒன்றை நடாத்த ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

**நடவடிக்கை**

அச்சுவேலிதோப்பு அருள்நந்தி வித்தியாசாலையில் போதிய ஆசிரியர்கள் இல்லை என்றும் மலசல கூட வசதியில்லை யென்றும் மேற்படி பாடசாலை பெற்ருர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சருக்கு செய்துள்ள முறைப்பாட்டைதொடர்ந்து கோப்பாய் எம். பி, திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை இது விடயமாக தீவிர நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

**"வாய்பு அளிக்குக"**

தேசிய கூட்டுஸ்தாபனம் மூன்ரும்தராசுருக்குத்தட்டச்சாளர்பதவிக்கு ஆங்கிலம் அல்லது சிங்களம் தேர்ச்சியுடையவர்கள் மட்டும் விண்ணப்பிக்க அனுமதிக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்து தமிழ் தட்டச்செழுத்தாளர்களுக்கும் வாய்ப்பு அளிக்கும்படி கோப்பாய் எம், பி· தேசிய உப்புக் கூட்டுஸ்தாபன தலைவருக்கு எழுதியகடிதத்தில் கேட்டுள்ளார்.

**மூடாதீர்'**

பலாலி கனிஷ்ட பல்கலைக்கழகத்தை மூடவேண்டாமென கல்வி அமைச்சரிடம் கேட்டுக்கொள்ளும் மகஜர் ஒன்றை வசாவிளான் பலாலி சமூக சேவை லீக் தலைவர் வழக்கறிஞர் திரு. வி. இராசநாயகம் அனுப்பிவைத்துள்ளார்.

வசாவிளான் பலாலி கிராமமுன்னேற்றச் சங்கமும் கனிஷ்டபல்கலைக்கழகம் மூடுவதை ஆட்சேபித்து ஒரு கடிதத்தை அனுப்பி வைத்துள்ளது

**முந்திரிகை செய்கை**

யாழ், மாவட்டத்தில் முந்திரிகை பயிரிடுவதற்கு யாழ். மாவட்ட கமத்தொழில் போதன ஆசிரியரை உதவி செய்யும்படி கேட்டுள்ளதாக மாவட்ட கமத்தொழில் விஸ்தரிப்பு அதிகாரி அறிவித்துள்ளார். அவர் பளையில் முந்திரிகை செய்கை பண்ணுவதற்குரிய வாய்ப்புக்கள் உள்ளதா என மண்ணின் தன்மையை பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி கோரப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் உதைபந்தாட்டக் கோஷ்யும், இன்று சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் மாலை 4-30க்கு மோதுகின்றன.

(தே. நி)


பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகரசபை ஆணையாளர்
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
6-10-70. 2504


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
எம். ஜி. ஆர், — சரோஜாதேவி! நம்பியார் — தங்கவேலு நடித்த
**திருடாதே**

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
கண்ணன் - ராதிகா தேங்காய் சீனிவாசன் நடித்த
**ஒரு விரல்** (ஒரு மர்ம சித்திரம்)

கெப்பிட்டல் (கொழும்பு)
**வெலிங்டன்** யாழ்.நகர்
(2-30, 6-30, 9-30)
தாய்க்குலத்தின் பெருமைக்கும் தமிழகத்தின் மாண்புக்கும் உதாரணமாய் வாழ்ந்த விஜயாவின் உள்ளத்தை உருக்கும் கண்ணீர் காவியம் உணர்ச்சி ஓவியம்...



ஸ்ரீ விநாயகா சுப்ரியா கம்பைன்ஸ்
**துலாபாரம்**
(தமிழ்)
★ ஏ.வி.எம்.ராஜன்
இந்திய ஜனாதிபதியின் 'ஊர்வசி' பரிசுபெற்ற ★ சாரதா
காஞ்சனா, முத்துராமன், ரி. எஸ். பாலையா, நாகேஷ், சுந்தரராஜன், பேபி ரோஜாரமணி
டைரக்ஷன்: வின்ஸன்ட்
(1969-ம் ஆண்டின் சிறந்த இயக்குனர்)


இசை.
344 மீ. அன்ட் 61 மீ.
மாலை 4-25 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஓடிவிளையாடுபாப்பா.
இரவு6-10 பேச்சு, 6-15 வயலின்6-30 விவசாய நிகழ்ச்சி, 6-45 கண்ணகி வழக்குரை. 7-00 திரைகானம், 7-15 பாட்டு, 7-45 நாடகம் 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 உரையாடல், 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்தித் தொகுப்பு


வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா ,பிரீபோயா 2-30
மனோகர் — மணிமாலா நடித்த
**எதிரிகள் ஜாக்கிரதை**

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
எம். ஜி. ஆர்-சரோஜாதேவி நடித்த
**என் கடமை**

REGAL
Jaffna
Daily: 4-45, 7&9-45p m.
Poya days 4 Shows
HOW TO SAVE A MARRIAGE AND RUIN YOUR LIFE
(Panavision&color)

MANOHARA
Jaffna
Daily 4-45, 7 &9-45 p.m
George Mont Gomery
in
HOSTILE GUNS
(Techni color)




படம் 'சிட்டு'

சமாதான நீதவானாக நியமனம் பெற்ற யாழ். மாநகரசபை அங்கத்தவர் ஜனாப் எம். ஏ. சி. எஸ். ஏ. காதருக்கு யாழ். நகர முஸ்லிம் மக்களும், அவரது நண்பர்களும் வரவேற்ற போது எடுக்கப்பட்ட படம்.

## 'உள்ளத்தில் தூய்மை இருந்தால் ஒளி உண்டாகும்'

சித்தன்கேணி, வெள்ளி

''உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது என விபுலானந்தர் கூறுகிறார். சரஸ்வதியை வெள்ளைத்தாமரையில் இருப்பதாகக் கூறுவது சும்மா மலரல்ல-அது உள்ள மலரே தூய்மையாகும். தூய்மையான உள்ளத்தில் தான் கல்வி பிறக்கிறது. உள்ளத்தில் தூய்மையிருந்தால்தான் ஒளி உண்டாகும் அப்போதுதான் நமக்கு வேண்டிய கல்வி, செல்வம், வீரம் எல்லாம் பிறக்கும்''

இவ்வாறு வழக்கறிஞர் திரு அ. அமிர்தலிங்கம் கலைநகர் இந்துசமய அபிவிருத்திச் சங்க ஆதரவில் நேருஜீ சனசமூக நிலையத்தில் நடந்த நவராத்திரி விழாவில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. நா க. தங்கரத்தினம் தலைமை வகித்தார்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

ஏட்டையடுக்கி மந்திரத்வத ஓதுவது சரஸ்வதி பூசையல்லஎன்கிறார் பாரதி. வீடுதோறும் கலையின் விளக்கம் வீதிதோறும் இரண்டொரு பள்ளி... தேடுகல்வி இல்லாத ஊரை நெருப்புக்கிரையாக்கு என்று ஆவேசத்துடன் பாரதி கூறுகின்றார் சரஸ்வதிக்குப் பூசை எதுவென்றால் சிறுவனுக்காகுகல் கல்வியூட்டுதல்தான் என்கிறார். அன்னசத்திரம் ஆயிரம் வைப்பதிலும்... ஓர் ஏழையைப் படிப்பித்தால் கூடிய புண்ணியம் என பாரதி கூறுகின்றார்,

வீரத்தைப்போற்றுவதற்கு பெண்ணையே கூறுகின்றார் ஆனால் இப்போது பெண்களை அடுப்படியிலே இருபிப்க்க முனைகின்றோம். அது மாறவேண்டும் மனிதனுக்கு சக்தியை அளிப்பவள் பெண் என்றமையினாலே கல்வி, செல்வம், வீரம் எல்லாவற்றுக்கும் பெண்ணை அதிபதியாக்கினர், மற்றவன் பணத்தில் வாடும் சோம்பேறிமக்கள் அல்லத் தமிழர் அங்கு உணர்ச்சி ஏற்ப்படு நாம் எல்லாம் கல்வி, செல்வம், வீரம் என்பதைப் போற்றுவோமானால் ஒரு தாழ்வும் ஏற்படமாட்டாது. கைசிவக்க வேலை செய்வதே உண்மையான வீரம் அதில் இருந்து வருவதே உண்மையான செல்வம் அது மாறின் நாம் மலைமகளையே திருமகளையோ நெருங்கமுடியாது. எவ்வாறு பூசைசெய்யிலும் அவள் விலகியே செல்வாள் துர்க்கை

4-ம் பக்கம் பார்க்க)

ஏற்படும்.

மகரம்- ஒளிபரப்பும் வாழ்க்கை. உறவினர்கள் மத்தியில் ஒற்றுமைமலரும் பொன்னான தினம்,

கும்பம்- கனிவான நினைவுகள் தலைதூக்கும். காதல் விவகாரங்களுக்கும் இடமுண்டு. சுபதினம்.

மீனம்- அவசரப்போக்கினால் அதிகாரிகளைப் பகைத்துக்கொள்ளுவீர்கள். எதற்கெடுத்தாலும் ஆத்திரம் ஏற்படும்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

அதிகாரி அறிவித்துள்ளார். அவர் பளையில் முந்திரிகை செய்கை பண்ணுவதற்குரிய வாய்ப்புக்கள் உள்ளதா என மண்ணின் தன்மையை பரிசிலனை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி கோரப்பட்டுள்ளார்.


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


### உங்கள் வீட்டிற்கு 'ஈழநாடு' நேரடி விநியோகம்

நாரந்தனை, வேலணை கிராமசபை எல்லைகளுக்குட்பட்டவர்களுக்கு வீடுகள்தோறும் 'ஈழநாடு' பத்திரிகையை விநியோகம் செய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. 'ஈழநாடு' பிரதிகள் தேவையானவர்கள் பின்வரும் விலாசதாரர்களுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

வை. வடிவேலு,
ஈழநாடு 'ஏஜண்ட்'
புளியங்கூடல் சந்தி.

பி. வில்லியம்,
நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை.

வி. யேசுராசா,
சரவணை மேற்கு,
வேலணை. 2499


**தீபாவளி மலிவு விற்பனை**

ஆரம்பம்: 10—10—1970

உங்கள் பண்டிகைக்கேற்ற ஜவுளித் தினுசுகளையும் சேலைவகைகளையும் ஏனைய சூட்டிங், சேட்டிங், சேட்டுவகைகளையும் மிகவும் மலிவான விலைகளில் பெற்றுக் கொள்வதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்,

தின்னவேலி சுத்தப்பட்டுச் சாறி ரூபா 215/- தொடக்கம் 265/- வரை
நைலெக்ஸ் பிறின்டெட் சாறி ரூபா 45/- தொடக்கம் 67/- வரை
''சீமா'' மணிபுரி சாறி ரூபா 35/- தொடக்கம் 155/- வரை
''சீமா'' டெட்ரோன் சாறி வ வி. ரூபா 42/50 ம வி. 37/50
''சீமா'' நைலோன் சாறி வ. வி. ரூபா 41/50 ம. வி. 36/50

**சாறி எம்போறியம்**

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்: ''சீமா சாறீஸ்''
124, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 418


**யாழ். வின்ஸர் திரையில்**
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி கணேசன் — காஞ்சனா
மஞ்சுளா - நாகேஷ் - ரமாபிரபா
நடித்த
**சாந்தி நிலையம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிக்ஸன் யோசனை: யுதாண்ட் வரவேற்பு; கம்யூனிஸ்டுகள் எதிர்ப்பு

## பழைய விஷயம் தான் என்கிறது சோவியத் யூனியன்





வாஷிங்டன், அக். 9

இந்தோ சீன அமைதிக்கு அமெரிக்க அதிபர் தெரிவித்த புதியயோசனைகளுக்கு எதிர்த் தரப்பினரிடமிருந்து சாதகமான வரவேற்புக் கிடைக்கவில்லை,

பிரிட்டன், தென் வியட்னும், லாவோஸ் கம்போடியா போன்ற நாடுகள் வரவேற்றுள்ளன.

பாரிஸில் நடைபெறும் அமைதிப் பேச்சுக்களில் கலந்துகொள்ளும் கம்யூனிஸ்ட் பிரதிநிதிகள் இருதரப்பினரும் அதிபர் நிக்ஸனின் யோசனைகளை நிராகரித்து விட்டனர்.

தென் வியட்னும் தற்காலிகப் புரட்சி அரசின் வெளி நாட்டமைச்சரும், பாரிஸ் பேச்சுக்களில் தென்வியட்னும் விடுதலை முன்னணியின் தலைமைப் பிரதிநிதிகளில் ஒருவருமான பின் அம்மையார் திரு நிக்ஸனின் யோசனைகள் பற்றிக் கருத்து வெளியிடுகையில் திரு நிக்ஸனின் யோசனைகள் பற்றி ஆலோசிப்பதற்கு முன்னர் வியட்னும் தகராறின் அடிப்படைப் பிரச்னைகள் தீர்க்கப்படவேண்டுமென்று குறிப்பிட்டார்.

ஐ. நா. தலைமைச் செயலாளர் யுதாண்ட் அதிபர் நிக்ஸனின் யோசனைகளை வரவேற்றிருக்கின்ருர்.

அமெரிக்காவில் அரசியல் கட்சிகள் இரண்டுமே அதிபர் நிக்ஸனின் யோசனைகளை வரவேற்றுள்ளனர்.

சோவியத் யூனியன் இவை பழைய யோசனைகள்தான் என்று குறிப்பிட்டுள்ளது.

## நாஸருக்கு தொடர்ந்து அஞ்சலி

கெய்ரோ, அக். 9

தொழிலாளர்களும், விவசாயிகளும், மாணவர்களும், பாமரர்களும், படித்தவர்களும் நீர்மல்கும் கண்களுடன் மறைந்த தலைவர் நாஸருடைய கபுறைநோக்கி சாரிசாரியாக புனித யாத்திரை செய்தவண்ணமுள்ளனர்.

கெய்ரோ பத்திரிகைகள் மறைந்த தலைவர் பற்றி அவருடைய தோழர்களும் சாகிகளும் நண்பர்களும் தீட்டிய கருத்தோவியங்களை தாங்கி வருகின்றன.

கெய்ரோ வானொலி நிலையமும் தினமும் மறைந்த தலைவர் நாஸரின் வாழ்க்கையையும் சேவையையும் பற்றி ஒலிபரப்புகிறது.

நாஸரின் பெயரில் தலைசிறந்த விஞ்ஞான சாதனைக்கு பரிசு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விஞ்ஞான ஆராய்ச்சி அமைச்சர் அஹ்மத் முஸ்தஃபா தீர்மானித்துள்ளதாக 'அல்-அஹ்ரம்' கூறுகிறது.

## ரஷ்யருக்கு நோபல் பரிசு

ஸ்ரொக்ஹோம், அக். 9

இவ்வாண்டுக்கான இலக்கிய நோபல் பரிசு ரஷ்யாவைச் சேர்ந்த அலெக்சாந்தர் கொல்சனிக்கின் என்பவருக்குக் கிடைத்துள்ளது. சர்வதேச அரங்கில் மனிதாபிமானத்தை அவர் நாவல் மூலம் உலக்கு அளித்தமையால் இப்பரிசு அளிக்கப்படுகிறது என நோபல் பரிசளிக்கும் சுவீடன் இலக்கியக் கழக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நோபல் பரிசைப் பெறும் நாலாவது சோவியத் எழுத்தாளர் இவராவார். இவரு...

## சாம்ராஜ்யத்தின் எதிர்காலம் பற்றி எடின்பரோ கோமகன்

லண்டன், அக். 9

சாம்ராஜ்யம் சர்வதேச ஐக்கியத்தையும் மனித சமுதாயக் கூட்டுறவையும் குறிக்கோளாகக் கொண்ட ஓர் உன்னத ஸ்தாபனம் என்றும் இது தனது அங்கத்துவநாடுகளுக்கும் உலகம் முழுவதிற்குமே அளப்பரிய நன்மை பயக்குவதாகவும் எடின்பரோ கோமகன் எடுத்துரைத்தார்.

ஸ்கொட்லாந்திலுள்ள இளெனீகிள்ஸ் நகரில் சாம்ராஜ்ய பத்திரிகையாளர் சங்க மாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே இளவரசர் பிலிப் மேற்கண்டாறு குறிப்பிட்டார். இலங்கை உட்பட 14 நாடுகளைச் சேர்ந்தசுமார் 100 பத்திரிகையாளர்கள், செய்தித்தாபன நிர்வாகிகள் ஆகியோர் இம்மாநாட்டில் பங்குபற்றினர்.

இளவரசர் மேலும் பேசுகையில், சாம்ராஜ்யத்தில் உயர்ந்த இலட்சியத்தில் நம்பிக்கை கொண்ட பத்திரிகையாளர்கள் தாம் எண்ணுவதை எடுத்துக்கூற வேண்டுமென்ருர். சாம்ராஜ்யத்தின் எதிர்காலம் பத்திரிகையாளர் போக்கில் தங்கியிருப்பதாகக் கூறிய அவர், சாம்ராஜ்யத்திற்குப் புத்துயிர் அளிப்பதும், அதனை உதாசீனம் செய்து சாகடிப்பதும் அவர்களது தீர்மானத்தைப் பொறுத்தது என்று எடுத்துரைத்தார்.

இலங்கை, பிரிட்டன், கனடா, அவுஸ்திரேலியா, நியூஸிலந்து. இந்தியா, பாகிஸ்தான், நைஜீரியா, ஜமேக்கா, பஹாமஸ், பெர்முடா, ஜிப்ரால்டர், ஹொங்கொங், மால்டா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

## இஸ்ரேல் குற்றச்சாட்டு: ரஷ்யா மறுப்பு

மாஸ்கோ, அக் 9

சுயஸ்கால்வாய்ப் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் ஏவுகணைகளை சோவியத் யூனியன் நிபுணர்கள் இயக்குவதாக ஐ. நா. போர் நிறுத்த ஸ்தாபனத்திடம் இஸ்ரேல் செய்துள்ள முறைப்பாட்டை சோவியத் யூனியன் மறுத்துள்ளது.

இஸ்ரேலின் இவ்விதமான குற்றச்சாட்டு மத்திய கிழக்கில் அமைதியை ஏற்படுத்த டாக்டர் ஜாரிங் எடுக்கும் முயற்சிக்கு இடையூருகவே அமையும் என சோவியத் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதிபர் நாஸர்

## இருதடவை பதவி துறக்க விரும்பினூராம்

கெய்ரோ, அக். 9

காலஞ்சென்ற ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் தாம் இறப்பதற்குமுன் சுகவீனம் காரணமாக இரண்டு தடவைகள் பதவியை விட்டு விலகுவதற்கு உத்தேசித்தாராம்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் நீரிழிவு நோய்க்காக சோவியத் யூனியனில் சிகிச்சை பெறப் போனபொழுதும், ஓர் ஆண்டுக்குமுன் மாரடைப்பு ஏற்பட்டபோதும் அவர் இவ்வாறு பதவிவிலகுவதற்கு யோசித்தாராம்.

ஆனல் தாம் பதவியிலிருந்து விலகினல் அரபு உலகில் சிக்கல்கள் ஏற்படும் என்று கருதி விலகாமல் இருந்தாராம் அல்அஃரம் பத்திரிகையில் வெளியாகியுள்ள செய்தியொன்றில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது இஸ்ரேலுடனன யுத்தத்தில் 1967ல் எற்பட்ட தோல்வியின் பொழுதும் அதிபர் நாஸர் பதவியிலிருந்து விலகமுன்வந்தார். ஆனல் மக்களின் வேண்டுகோளைத் தொடர்ந்து ரத்து செய்தார்.

# பாகிஸ்தானுக்கு மீண்டும் யு.எஸ். ஆயுதம்

## இந்தியா கடும் ஆட்சேபம்

புதுடில்லி, அக். 9

பாகிஸ்தானுக்கு மீண்டும் ராணுவ தளபாடங்களை விற்பதற்கு அமெரிக்கா முடிவு செய்கின்றது.

அமெரிக்காவின் இந்த முடிவை இந்திய அரசாங்கம் பலமாகக் கண்டித்திருக்கின்றது.

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா மீண்டும்ஆயுதம் வழங்குவதனல் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையிலுள்ள சமபலம் மீறப்படும் என்று பயப்படத் தேவையில்லையென்று அமெரிக்க வட்டாரங்கள் கருதுவதாகத் தெரிகின்றது.

எந்தவித ஆதாரமுமின்றி மூன்றுதடவைகள் இந்தியாவுக்கெதிராக போர்தொடுத்த பாகிஸ்தானுக்கு இப்பயங்கர ஆயுதங்களைக் கொடுப்பது மிகவும் பாரதூரமான விடயமாகும். இவ்விடயத்தில் அமெரிக்காவிற்குபாகிஸ்தான் அளிக்கும் உறுதி மொழிகளை நம்பி வீணே இருந்துவிட முடியாது என இந்தியாவில் இருக்கும் அமெரிக்கத் தூதுவரிடம் இந்தியா அறிவித்துள்ளது.

## 'கம்யூனிஸம்என்ருல்என்ன என்பதை உலகம் இன்று உணர்ந்து விட்டது'

— வி. பொன்னம்பலம்

உடும்பராய், வெள்ளி

'சோஷலிச அமைப்பின் கீழ்தான் மக்கள் சுபீட்சமாக வாழமுடியும் சோஷலிசத்துக்கான பாதைக்கு மக்களை அழைத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு வாலிபர்கள் கையில்தான் இருக்கிறது. கம்யூனிஷம் என்ருல் என்ன என்பதை உலகம் இன்று உணர்ந்து விட்டது அதன் பலனுக மூன்றிலொரு பகுதி மக்கள் உலகில் முதலாளித்துவ அரசமைப்பிலிருந்து விடுபட்டுள்ளார்கள். உலக நிலப்பரப்பில் அரைவாசிக்குமேல் சோஷலிஷ அமைப்பின் கீழ்வந்து விட்டது.'

உடும்பராய் கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க வருடாந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய வடபிரதேச கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் திரு வி. பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினூர்.

அவர் மேலும் கூறியதாவது:

15க்கு மேற்பட்ட நாடுகள் தம்மை விடுவித்துக் கொண்டு கம்யூனிஷத்தை நோக்கி விரைந்து செல்வதையும் நாம் பார்க்கிருேம். குறிப்பாக இந்நாட்டின் வாலிபர்கள் விழிப்புணர்ச்சியுடன் செயல்பட வேண்டிய காலம் வந்துவிட்டது இந்த நாட்டிலுள்ள தோட்டங்கள் அந்நியக் கம்பனிகள் வங்கிகள் யாவும் தேசியமயமாக்கப்படுவதுடன் ஏரிக்கரைப் பத்திரிகைகளை அரசாங்கம் உடனடியாக கையேற்க வேண்டும்.

ஆசிரியர்களை திறமையின் அடிப்படையில் நியமிக்க வேண்டுமெனக்கூறும்தமிழரசார் இ போ ச. கண்டக்டர்களை எம். பிக்களின்சிபார்சின் பேரில் எடுக்கப்படவேண்டுமென்ற அரசாங்க தீர்மானத்தை ஆதரித்து தங்களை ஆதரித்து வாக்களித்தவர்களுடைய பெயர்களை சிபார்சு செய்திருப்பது விந்தையானதும் வருந்தத்தக்கவிடயமும். தமிழ்மக்கள் தமது உரிமைகளைப் பெற வேண்டுமானல் தமிழரசாரும் தமிழ்க் காங்கிரசாரும் காட்டும் பாதையை கைவிட்டுவிட்டு நாம் காட்டும் சோஷலிசப்பாதையை பின்பற்றுவதே சிறந்த வழியாகும்.

திரு க. தவஞானம்பேசும் பொழுது இன்று வாலிபர்கள் பெருமளவில் தமிழரசுக் கட்சியிலிருந்தும் தமிழ் காங்கிரஸ் கட்சியிலிருந்து தம்மை விடுவித்துக்கொண்டு எமதணிகளில் பெருமளவில் சேர ஆரம்பித்து விட்டார்கள். இனிமேல் எக்காரணங்களைக்காட்டியும் தமிழரசுக் கட்சியாலோ அல்லது காங்கிரஸ் கட்சியாலோ தமிழ்மக்களை எமது அணிகளில் சேரவிடாது தடுத்து நிறுத்திவிட முடியாது என்ருர்.

# 'யாழ். மாவட்ட மின்சார தடை! மக்கள் இன்னல் படுகின்றனர்'

## கோப்பாய் கி. ச. தலைவர் கண்டனம்!

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண மாவட்டத்தில் அடிக்கடி மின்சார விநியோகம் தடைபடுவதால் யாழ்ப்பாண மக்கள் பலவித இன்னல்களுக்குள்ளாகிருர்கள். மஸ்கெலிய ஓயா மின்சார விநியோகத்திட்டத்தை குறிப்பிட்டதாவ...

உபதலைவராக வேலணை கிராம சபைத்தலைவர் திரு. க. சதாசிவமும் காரியதரியாக திரு. தி. பரமானந்தராசாவும் உப காரியதரிசியாக மானிப்பாய் கிராம சபைத் தலைவர் திரு. எஸ் மார்க்கண்டுவும் தனதிகாரியாக நாரந்தனைக் கிராம சபைத் தலைவர் திரு. த. சண்முகலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்,

## திருக்கேதீச்சர ஆலயத்தில்

# வவனியா கொலைவழக்கில் ஜூரி மயக்கமடைந்தார்!

யாழ்ப்பாணம். சனி

வவனியாக் கொலைவழக்கின் இறுதிக்கட்டத்தில் முடிக்குரிய வழக்கறிஞர் அட்வகேட் குமார் அபயசேகரா தொகுப்புரை நடத்திக் கொண்டிருக்கும்போது ஜூரிகளில் ஒருவர் நேற்று மயக்கமடைந்தார். இதைத் தொடர்ந்து நீதியரசர் வழக்கை ... யப்பட்டது.

இவ்வழக்கில் 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் 16 ம் திகதி வவனியாவில் ரி. சங்கரப்பிள்ளை என்பவரைக் கொலை செய்ததாக கதிர்காமு யோகராசா, மணியன் நடராசா ஆகியோர்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது எதிரிகள் சார்பில் அட்வக்...

## ...கு மீறிக் குடியேறியவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேட் குமார் அபயசேகரா தொகுப்புரை நடத்திக் கொண்டிருக்கும்போது ஜூரிகளில் ஒருவர் நேற்று மயக்கமடைந்தார். இதைத் தொடர்ந்து நீதியரசர் வழக்கை அடுத்த பருவகால விசாரணைக்கு ஒத்திவைத்தார்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ்கோர்ட்டில் நீதியரசர் ஓ. எல். டி. கிரெஸ்டர் முன்னிலையில் மூன்ருவது தினமாக விசாரணை செய்

கரப்பின்னை என்பவரைக் கொலை செய்ததாக கதிர்காமு யோகராசா, மணியன் நடராசா ஆகியோர்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது எதிரிகள் சார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன், புரக்டர் வி. ஏ. ஈ. பாலசிங்கத்தின் அனுசரணையுடன் ஆஜராஞர்.

எதிரிகளுக்காக அரசாங்கத்தால் புரக்டர் ஏ. குலநாயகம் நியமிக்கப்பட்டிருந்தார்.

## 'கொழும்பில் இந்து அனுதைகள் பாடசாலை நிறுவலாம்!'

### இலட்சுமண ஐயர் யோசனை

வெள்ளவத்தை வெள்ளி

'உலகிலுள்ள நகரங்கள் அனைத்திலும் கொழும்பு மாநகரத்திலேதான் நவராத்திரி விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது என்பேன். வரவர இந்த விழாமுறைகள் பெருமளவு செலவுகளுடன் விரிவடைந்து வருகின்றன. உண்மையில் இவ்வளவு செலவுகள் அவசியம்தானு? ஒவ்வொரு திணைக்களத்திலும் கலைமகள் விழாவுக்காக சுமார் 2000 ரூபா செலவழிக்கிருர்கள். இப்படி 30 திணைக்களங்களில் ஒரு பின்னேரத்திற்காக ரூபா 60,000 செலவழிக்கிருர்கள். இந்தப் பணத்தை ஒரு இந்து அனுதைகள் பாடசாலைக்குக் கொடுக்கலாம். அல்லது கொழும்பில் எமக்கென்று ஒரு இந்துக் கலாசார நிலையம் இல்லை. அதற்குக் கட்டிடநிதிக்கு உதவி செய்யலாம். இவற்றை விடுத்து இப்படி வீணுகப் பணத்தை அள்ளிக் கொட்டுவதை நான் வரவேற்க மாட்டேன் இனியாவது திணைக்களங்கள் இதை உணர்ந்துகொள்ள வேண்டும்.''

இவ்வாறு திரு. கி. இலட்சுமணஐயர் அஞ்சல் திணைக்களத்து இந்து மன்றம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடாத்திய கலைமகள் விழாவில் சிறப்புச் சொற்பொழிவாற்றுகையில் கூறிஞர்.

பத்மஸ்ரீ எஸ். குஞ்சிதபாதக் குருக்கள் பூசையை ஆரம்பித்து வைத்தார். திரு ரி மாணிக்கவாசகர் தேவாரம் இசைத்தார். இந்து மன்றத் தலைவர் திரு எஸ் ஆறுமுகம் வரவேற்புரை நிகழ்த்திஞர். நடனமாடிய நாட்டிய செல்வி கீதாஞ்சலி சிவாஜிதுரைக்கு தபால் மாஅதிபதி திரு வேர்ணன் அபயசேகரா தங்கப்பதக்கம் பரிசு கொடுத்துக்கௌரவித்தார். வில்லிசைத்த இந்து கனிட்ட பாடசாலை மாணவர்களுக்கும் இவர் பரிசுகளை வழங்கிஞர்.

## நெசவுநிலையத்தை உடைத்து சேலைகள், வேட்டிகள் திருட்டு

அம்பன், வெள்ளி

நாகர்கோவில் தரவையிலுள்ள அரசினர் நெசவு நிலையம் நேற்று இரவு கதவுகள் உடைக்கப்பட்டு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த விலையுயர்ந்த சேலைகள், வேட்டிகள், சாரங்கள் ஆகியனவும், கைத்தறியில் நெய்தபடியே இருந்த சேலைகள் யாவும் துண்டாடப்பட்டுக் களவாடப்பட்டுள்ளன.

இதுசம்பந்தமாக் நாகர்கோவில் நெசவுநிலைய ஆசிரியர் திரு. ராமு சிதம்பரம் அவ்வூர் கிராமசேவையாளரிடமும், பருத்தித்துறைப் பொலிசிலும் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து பருத்தித்துறைப் பொலிஸ் அதிகாரி சமரசேகர ஸ்தலத்திற்குச் சென்று பார்வையிட்டதுடன் நிலையத்தில் வேலை புரிபவர்களது முறைப்பாட்டையும் அவ்வூரிலுள்ள சில நபர்களது முறைப்பாட்டையும் பதிவு செய்துள்ளார். பொலிஸ்அதிகாரி தனது மறு அறிவித்தல் வரை நெசவுநிலையத்தைத் திறக்கவேண்டாமென ஆசிரியருக்கு உத்தரவிட்டுள்ளார். நெசவு சாலையில் இருந்த சில தடயப் பொருள்களை எடுத்துச் சென்றுள்ளார் கொழும்பிலிருந்து கைவிரலடையாள நிபுணர் வரவழைக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த வருடமும் இதே நெசவுசாலை உடைக்கப்பட்டு பெருந்தொகையான சேலைகள் களவு போனதென்பது குறிப்பிடத்தக்கது.

றிறது என நோபல் பரிசளிக்கும் சுவீடன் இலக்கியக் கழக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நோபல் பரிசைப் பெறும் நாலாவது சோவியத் எழுத்தாளர் இவராவார். இவருக்கு வயது 52. இவர் தனது நாவல்களில் ஸ்ரலினிசத்தை எதிர்த்து எழுதிஞர்.

கடந்தவருடம் அலெக்சாந்தர் கொல்சனிக் ரஷ்ய எழுத்தாளர் சங்கத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

— —

## ஐ. நாவில் 32 நாடுகளின் கோரிக்கை

நியுயோர்க், அக். 9

ஐ. நா. சபையிலுள்ள 32 நாடுகள் தென் ஆபிரிக்காவுக்கு ஐ. நா அங்கத்துவ நாடுகள் சில ஆயுத உதவி அளித்து வருவதைக்கண்டித்துத் தீர்மானம் ஒன்றைத் தாக்கல் செய்துள்ளன. இதுபற்றி ஆராய ஐ. நா. சபையின் விசேஷ கூட்டத்தைக் கூட்டுமாறு இந்நாடுகள் ஐ. நா. சபைப்பொதுக் காரியதரிசியைக் கேட்டுள்ளன.

தென் ஆபிரிக்காவிற்கு ஆயுதங்கள் அளிப்பதைத் தடுக்குமாறும், அந்நாட்டுக்குக் கொடுப்பதற்காகச் செய்யப்படும் ஆயுத உற்பத்தியைத் தடுக்குமாறும் இந் நாடுகள் கோரியுள்ளன.

## மீன்பிடி தொழில் இயந்திரமயமாகும்

கோட்டை, வெள்ளி

மீன்பிடித்துறையில் இலங்கை தன்னிறைவு காணுவதற்கான இயந்திரமயத் திட்டமொன்றை மீன்பிடித்துறை அமைச்சு அமைக்க முடிவுசெய்துள்ளது.

இத்திட்டத்திற்கமைய மீனவர்கள் சங்கங்கள் மூலமாக மீன்பிடிவள்ளங்களையும், மீன்பிடிப் படகுகளையும் பெறமுடியும். படிப்படியாக இயந்திரமய மீன்பிடித் தொழிலைக் கொண்டுவருவதற்கான அமைச்சின்திட்டத்தின்கீழ் 500மீன்பிடிவள்ளங்களும் 1000மோட்டார்படகுகளும் வழங்க அமைச்சு திட்டமிட்டுள்ளது.

தும், ஓர் ஆண்டுக்குமுன்மாரடைப்பு ஏற்பட்டபோதும் அவர் இவ்வாறு பதவிவிலகுவதற்கு யோசித்தாராம்.

ருந்து விலகமுன்வந்தார். ஆனால் மக்களின் வேண்டுகோளைத் தொடர்ந்து ரத்து செய்தார்.

## அத்துமீறிகுடியேறியவர்களை அகற்ற நடவடிக்கை

நல்லூர், வெள்ளி

கிளிநொச்சியில் உள்ள முடிக்குரிய காணிகளில் அத்துமீறி குடியேறியவர்களை அவ்விடங்களை விட்டு உடனடியாக அகற்ற நடவடிக்கை யெடுக்குமாறு கிளிநொச்சிப்பகுதி காணி உத்தியோகஸ்தர் யாழ் அரசாங்க அதிபரிஞல் கேட்கப்பட்டுள்ளார்.

இப்பகுதிகளில் அத்துமீறி குடியேறியவர்களின் தொகை 3062 எனவும் அவற்றின் முறைப்படி அமர்த்தப்பட்டவர்களின் தொகை 875, மற்றும் 895 பேர்மீது வழக்குத் தொடரப்பட வேண்டும். எஞ்சியவர்கள்மீது விசாரணை நடந்துகொண்டிருப்பதாகவும் கிளிநொச்சி பகுதி காணியதிகாரி அரசாங்க அதிபரிடம் தெரிவித்துள்ளார்.

## சிற்றூழியர் தமிழ்மூலம் சிங்களம்கற்க வசதி

யாழ்ப்பாணம், சனி

'சிங்களம் படிக்க வசதி செய்துதராவிட்டால் எம்போன்ற சிற்றூழியர்களை சிங்களம் கற்க வேண்டுமென்ற நிபந்தனையிலிருந்து தளர்த்திவிடவும் அல்லது லது மூன்ரும் வகுப்பு சிங்கள மொழி அறிவுபெறும் சிற்றூழியரை தகுதி கண்டு ஏற்கவேண்டும்.'

இவ்வாறு கோரும் மகஜரை வடமாகாணபொது சிற்றூழியர் சேவைச் சங்கச் சார்பில் திரு எஸ். ஆறுமுகம் அண்மையில் அகில இலங்கை பொதுச் சேவைச் சமாசத்திடம் கையளித்துள்ளார்.

மேற்படிகோரிக்கைகளுக்கு உடன் நடவடிக்கைஎடுக்கப்படுமென்றும் கூடிய விரைவில் சிற்றூழியருக்கு யாழ். செயலகத்தில் தமிழ் மொழிமூலம் சிங்களவகுப்பு நடாத்தப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கோரிக்கைகள் அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டார நாயக்காவுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (கு வி ம)

— —

## உறவைதுண்டிக்க கோரிக்கை

கொழும்பு, வெள்ளி

அங்கோலா, மொஸாம்பிக், கினி ஆகிய குடியேற்ற நாடுகள் சம்பந்தமாக ஐ. நா. தீர்மானத்தை மதித்து நடக்காத போர்ச்சுக்கலுடனுள்ள ராஜீயத் தொடர்பைத் துண்டித்துக்கொள்ள வேண்டுமென்று ஆசிய-ஆபிரிக்க ஒருமைப்பாட்டுச்சங்க இலாகாக் கிளை பிரதமரைக் கேட்டுள்ளது. (சி.பி.ஏ)

தில் அடிக்கடி மின்சார விநியோகம் தடைபடுவதால் யாழ்ப்பாண மக்கள் பலவித இன்னல்களுக்குள்ளாகிருர்கள். மஸ்கெலிய ஓயா மின்சார விநியோகத்திட்டத்தை குறிப்பிட்டகால எல்லைக்கு முன்னதாகவே நிறைவேற்றுவதற்கு இப்போதுள்ள வேலையாட்களைப் போன்று இரட்டிப்பு மடங்கானவர்களைக் கொண்டு துரிதமாகச் செய்யவேண்டுமென காணி நீர்ப்பாசன அமைச்சரைக் கோர வேண்டும்'' என்று கோப்பாய் கிராமசபைத் தலைவர் திரு. தி. பரமானந்தராசா யாழ்ப்பாண மாவட்ட கிராமசபைத் தலைவர்களின் சங்க ஆண்டுக்கூட்டத்தில் பேசுகையில் யோசனை கூறிஞர்.

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் 45 கிராமசபைத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

சங்கத்தின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட மல்லாகம் கிராமசபைத் தலைவர் திரு. வி. பொன்னம்பலம் பேசுகையில் உள்ளூராட்சி நிர்வாகங்களில் கட்சிக்கொள்கைகளைத் தாம் ஒருபோதும் கலந்ததில்லையென்றும் இனிமேலும் கலக்கப்போவதில்லையென்றும் தெரிவித்தார். சங்கத்தின் முன்ஞள் தலைவர் திரு. ஏ. ஜி. இராஜசூரியரையும் அவர் பாராட்டிஞர்.

நாவற்குழி கிராமசபைத் தலைவர் திரு. சடாட்சரம் பேசுகையில் புதிய அரசியல் அமைப்பில் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி ஒரு மகஜர் அனுப்ப வேண்டுமெனக் கூறிஞர்.

சங்கத்தின் தலைவராக திரு. வி. பொன்னம்பலமும் க. சதாசிவமும் காரியதரியாக திரு. தி. பரமானந்தராசாவும் உப காரியதரிசியாக மானிப்பாய் கிராம யாக நாரந்தனைக் கிராம சபைத் தலைவர் திரு. த. சண்முகலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.

## திருக்கேதீச்சர ஆலயத்தில் கேதாரகௌரிவிரத இலட்சார்ச்சனை

மன்னர், வெள்ளி

திருக்கேதீச்சர ஆலயத்திலே எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ கௌரி அம்பாளுக்கு இன்று காலை சந்தி தொடக்கம் தீபாவளி அன்று காலை சந்தி முடியும் வரைக்கும் இருபத்தொரு பொழுதிற்கு நடைபெறவிருக்கும் கேதார கௌரி விரத விழாவில் ஒரு லட்சத்திற்குக் குறையாது அர்ச்சனைகள் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நாள்தோறும் ஐந்து சகஸ்திரநாம அர்ச்சனைக்குக் குறையாது செய்யப்படவுள்ளது. இத்துடன் நாள்தோறும் சுவாமிக்கும் அம்பாளுக்கும் ஒரு ஸ்நபன அபிஷேகத்திற்குக் குறையாது அபிஷேகங்கள் செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த அபிஷேகம் நாள்தோறும் காலை 10-15 மணியளவில் தொடங்கப்படும் இந்த அபிஷேகங்களையும், அர்ச்சனைகளையும் செய்வதற்குப் பல அடியார்கள் முன்வந்திருக்கிருர்கள். இதுவரையும் முன்வராதவர்கள் இந்த அபிஷேகங்களை செய்ய விரும்பினுல், (தனிப்பட்ட முறையிலோ, கூட்டாகவோ) காலையிலும் மாலையிலும் அபிஷேகங்கள் செய்வதற்கு தேவஸ்தானத்தாரால் ஒழுங்குகள் செய்யமுடியும்.

'உருத்திரா அபிஷேகம் செய்யவிரும்பியவர்கள்தாங்கள் விரும்பினுல், ஸ்நபன அபிஷேகங்கள் செய்ய நியமிக்கப்பட்டுள்ள நேரங்களில் மேலதிகமாகப் பங்கு பற்றிச் செய்துகொள்ளலாம். மறு நேரங்களிற் தனிப்பட்ட முறையிலும் செய்துகொள்ளலாம்' என்று திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை தெரிவிக்கிறது.

கேதார கௌரி விரதம் அனுஷ்டிக்கும் காலத்தில் கௌரி அம்பாளுக்கு நியம முறைப்படி பலவித பழங்களும், நைவேதனங்களும் படைப்பதற்குவேண்டிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன இதனுல் ஒரு சகஸ்திரநாம அர்ச்சனைக்கு வழமையில் பெறும் கட்டணத்திலின்றும் சிறிது கூட்டி அறவிட ஏற்பாடாகியுள்ளது. நாள்தோறும் இலட்சார்ச்சனை அம்பாள் சந்நிதியில் மாலை 7 மணியளவில் ஆரம்பிக்கப்படும். மற்றைய காலங்களிலும் விரும்பிய அடியார்கள் வழமைபோல் சுவாமிக்கும் அம்பாளுக்கும் அர்ச்சனைகள் செய்துகொள்ளலாமென அறிவிக்கப்படுகிறது.


# மகத்தான தீபாவளி மலிவு விற்பனை!

(10—10—70 —— 28—10—70)

இனும்! ★ இனும்!! ★ இனும்!!!

50-00 ரூபாவுக்கும் அதற்கு மேற்படவும் ஜவுளி வாங்குபவர்கள் ஒவ்வொருவருக்கும் எதிர்பாராத இலவச வெகுமானம் கொடுக்கப்படும்.

# டயரூம்ஸ்

54, 60, மெயின்வீதி, (தொலைபேசி: 316) யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

உண்மையும் அகிம்சையும் நோக்கமாகக் கொண்டு உழைப்பின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வற்ற சமுதாய அமைப்பைக் கொண்ட கிராம சுயராஜ்யம் எனது பிறப்புரிமை. — மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் புரட்டாசி மாதம் 24-ந் திகதி (10-10-70)


## நிக்ஸன் திட்டம்

இந்தோ சீனப் பிராந்தியத்தில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அமெரிக்க அதிபர் திரு. ரிச்சார்ட் நிக்ஸன் புதிய சமாதானப் பிரேரணையை முன்வைத்திருக்கிறார். யுத்தநிறுத்தம், போர்க் கைதிகளை விடுதலை செய்தல், துருப்புக்களை வாபஸ் பெறுதல், இந்தோ சீனு பற்றிய பாரிஸ் பேச்சுவார்த்தைகளை அனைத்துலக மகாநாடுமுறையில் விஸ்தரிப்பது ஆகிய அம்சங்கள் இந்தப் புதிய சமாதானத் திட்டத்தில் இடம்பெற்றுள்ளன. இதற்கு முன்னரும் இப்படி புதிய சமாதானத் திட்டங்களை திரு. நிக்ஸன் மட்டுமல்ல அவருக்கு முன் அதிபராக இருந்த லிண்டன் ஜோன்சனும் அடிக்கடி தெரிவித்துவந்திருக்கின்றார் ஆனால் அவை வெறும் திட்டங்களாகத்தான் முடிந்தனவேயன்றி சமாதானத்தை ஏற்படுத்த அவற்றால் முடியவில்லை. முன்னர் தெரிவித்த திட்டங்களைவிட திரு. நிக்ஸன் இப்போது தெரிவித்துள்ள திட்டங்கள் சிறிது நம்பிக்கையளிக்கக் கூடியவையாகத் தோன்றுகின்றன.

'ஆழம்தெரியாமல் காலை' விட்டவன் கதையாக அமெரிக்கா வியட்னுமில் தலையைக் கொடுத்துவிட்டு அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறது கௌரவமாக அதிலிருந்து எப்படி வெளியேறுவது என்பதுதான் அதன் முக்கிய பிரச்னை. வியட்னுமில் மாட்டிக்கொண் சிக்கல் கம்போடியாவுக்குள்ளும் இழுத்து விட்டிருக்கிறது. இந்தோ, சீனுவுக்குள் அமெரிக்கா தன்னை சிக்க வைத்துக் கொண்டதால் நிக்ஸன் நிர்வாகம் அமெரிக்க மக்கள் மத்தியிலும் எதிர்ப்பையும் அதிருப்தியையும் சம்பாதித்துள்ளது. அடுத்த தேர்தலும் நெருங்கிக்கொண்டிருக்கிறது. இந் நிலையில் இந்தோ சீனுவில் அமெரிக்கா தொடர்ந்து திரு. நிக்ஸன் நிர்வாகத்துக்கு அடுத்த தேர்தலில் செல்வாக்குக் குறையக்கூடும் என்ற அச்சம் திரு. நிக்ஸனுக்கு ஏற்படுவது இயல்பு.

இந்தோ சீனுவில் அமைதி ஏற்படுவதன் மூலம் ஆசியாவில் அமைதி ஏற்பட முடியுமென்பது திரு நிக்ஸனின் நம்பிக்கை. ஆசியாவில் மிகப் பெரிய நாடும் உலகிலேயே மிகப் பெருந்தொகையான மக்களைக் கொண்டதும் மக்கள் சீனம். ஆசியாவில் சக்தி மிகுந்த நடாக விளங்குவதும் உலகவல்லரசுகளில் ஒன்றாக வலுப்பெற்று வருவதும் மக்கள் சீனம்.

இந்தோ சீனத்திலும் சரி, ஆசியாவிலும் சரி உண்மையான அமைதியை ஏற்படுத்தவும் சமாதானத்தை நிலைநாட்டவும் திரு. நிக்ஸன் மட்டுமல்ல வேறு எவராயினும் எந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தாலும் அதற்கு மக்கள் சீனத்தின் சம்மதமும் ஒத்துழைப்பும் ஆதரவும் இல்லாதவரை அது வெற்றி பெறுவதோ சரியானமுறையில் செயல்படுவதோ சாத்தியமல்ல.

ஐ. நா. வில் மக்கள் சீனத்தைச் சேர்ப்பதற்கு ஐ நா வெள்ளிவிழாக் கொண்டாடும் இச்சமயத்திலும் அமெரிக்கா வழக்கம் போல் எதிர்க்கக்கூடும். ஐ. நா. வில் சீனுவைச் சேர்க்காமலும், அதை அங்கீகரிக்காமலும் இந்தோ சீனப் பிரச்னைக்கு சமாதானத்தீர்வோ ஆசியாவில் அமைதியையோ அமெரிக்காவினுலும் சரி வேறு எவரினுலும் சரி ஏற்படுத்துவதென்பது சுலபமல்ல.

மக்கள் சீனத்தை அங்கீகரித்து அதை ஐ. நாவிலும் அனுமதித்து அதன்பின்னர் திரு. நிக்ஸன் கூறுவது போன்று ஜெனிவா வகையான சர்வதேசமகாநாட்டில் சீனுவையும் சேர்த்துப் பேச்சுவார்த்தை நடத்தினுல் அதில்தான் சரியான பயன்

# இலங்கையும் சமஷ்டி அமைப்பும்

— எஸ். சிவசுப்பிரமணியம் —

சமஷ்டி அரசியல் அமைப்பு உலகநாடுகளால் ஒற்றையாட்சியமைப்பைப் போன்றே ஏற்றுக்கொள்ளப்பட்டதொரு அரசியல் அமைப்புத்தான். நமது நாட்டைப் பொறுத்தளவில் சமஷ்டி அரசியல் அமைப்பு பற்றிய கருத்து இன்று நேற்று ஏற்பட்டதொன்றல்ல இலங்கையின் முன்னைய அரசியல் அமைப்பிலும் இடம் பெற்றிருந்தது நாட்டின் அரசியல் அமைப்பில் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்ற நோக்கமும் அந்நியராதிக்கத்தைக் களையவேண்டும் என்பதும், புதிதானதொன்றல்ல. இவற்றிற்காகப் பல்வேறு நிறுவனங்களும் தலைவர்களும் காலத்துக்குக் காலம் நடவடிக்கைகள் எடுத்துவந்தார்கள். அவர்களில் பலர் இன்றில்லை. இந்தநிறுவனங்களில் சிலாப சங்கம் புகழ்பெற்றதும் மிகப் பழமையானதுமாகும். இச் சங்கம் காலஞ்சென்ற தேசாபிமானியான திரு சி. இ. கொறியாவின் தலைமையில் நாட்டின் சுதந்திரத்துக்காகப் பாடுபட்ட முன்னேடி ஸ்தாபனங்களில் ஒன்று. இச் சங்கத்தில் திரு. விக்ரர் கொறியா. திரு. பண்டிதசேகரா, தற்போதையசமஷ்டிக் கட்சித்தலைவரான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் நண்பரான வண எஸ். கே. பொன்னையா போன்ற பல தலைவர்கள் இச்சங்கத்தில் அங்கத்தவர்களாக விருந்தனர். இந்த சிலாப சங்கம் சமஷ்டி அமைப்பு அரசாங்கம் இலங்கைக்கு உகந்தது எனத் திட்டங்கள் வகுத்தது. இதன் பின்னர் மேற்கத்திய, கிழைத்தேச அரசியல் அமைப்பு, அரசியல் வரலாறு ஆகியவற்றை நன்கு தேர்ந்தவரான காலஞ்சென்ற எஸ் டபிள்யு ஆர். டி, பண்டாரநாயக்கா இலங்கைக்குப் பொருத்தமானதென்று கருதிய பல அமைப்புகளில் சமஷ்டியும் ஒன்று. இந்த வேளையில் அன்னிய நாட்டு அறிஞரும் ராஜதந்திரியுமான கலஞ்சென்ற டாக்டர் ஏச். கபீர் கூறியதும் இங்கு குறிப்பிடத் தக்கதொன்ருகும். இலங்கையின் புகழ்பெற்ற தேசாபிமானிகளில் ஒருவரான திரு. வில்மட் பெரேராவினுல் நிறுவப்பட்ட இலங்கையின் பெரிய கல்வி கலாச்சார நிறுவனங்களில் ஒன்ருன ஹொரணையிலுள்ளசிறிபாலி நிறுவனத்தின் வெள்விவிழாவில் பேசுகையில் மேற் குறிப்பிட்ட மேல்நாட்டறிஞரான காலஞ்சென்ற டாக்டர் ஏச். கபீர் சமஷ்டி அரசியல் அமைப்பு குறித்து விளக்கமாக கூறினுர். சமஷ்டி அரசாங்கம்பற்றி அவர் பேசுகையில் தனதுகருத்தை வெளியிட்டது மட்டுமன்றி உலகப் புகழ்பெற்ற அறிஞரான டாக்டர் ரவீந்திரநாத் தாகூரின் கருத்துக்களையும் மேற்கோள்களாக எடுத்துக் காட்டி உரையாற்றினுர். இந்த வெள்ளிவிழாக் கூட்டத்திற்கு காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யு. ஆர். டி, பண்டாரநாயக்கா தலைமை தாங்கினுர். அந்தக் கூட்டத்தில் பிரசன்னமானவர்களில் திரு. டட்லி சேனநாயக்காவும், தற்போதைய நிதிஅமைச்சர் டாக்டர் என். என். பெரேராவும் இருந்தனர்.

காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்கா காலத்தில் கொழும்பு ஹவ்லொக் நகரில் உள்ள ஒரு கல்விவட்டத்தில் சிங்களவர், தமிழர், பறங்கியர், இஸ்லாமியர் ஆகிய சகல இனத்தவராலும் ஒழுங்குசெய்யப்பட்ட ஒரு மகாநாட்டில் சமஷ்டிக்கட்சித் தலைவர் திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகம் சமஷ்டிக் கொள்கையை ஆதரித்து நம்பிக்கையூட்டக்கூடிய உரையொன்றை நிகழ்த்தினுர் இலங்கையில் சமஷ்டிக் கொள்கை புதிதானதொன்றல்ல என்பதை விளக்குவதற்காகவே மேற்படி முன்னைய சம்பவங்கள் இங்கு தரப்பட்டன.

இலங்கைக்குப் புதியஅரசியல் திட்டமொன்றை வகுப்பதற்கு ஆட்சிமன்ற இணைப்புக்குழுவொன்று நியமிக்கப்பட்டபோது நாட்டுக்குச் சமஷ்டி அரசியல்அமைப்பை காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்கா விரும்பாத போதும் அவர் சமஷ்டி அரசியல் அமைப்புபற்றி விவாதிப்பது இக்குழுவில் தவிர்க்கப்படவில்லை எனக் குறிப்பிட்டார், அந்த நேரத்தில் அவர் சமஷ்டிக்கொள்கையை எதிர்த்தபொழுதும் ஆட்சிமன்ற இணைப்புக்குழுவில் சமஷ்டி பற்றிய கருத்துக்களை விவாதிப்பதற்கு இடமளித்துள்ளமை நினைவுகூரத்தக்க தொன்ருகும்.

தற்போதைய அரசியல் நிர்ணய சபையின் அங்குரார்ப்பணக் கூட்டத்திலோ அல்லது கூட்டத்திற்கு முன்னரோசமஷ்டிக் கட்சினர் உத்தேச புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தின்கீழ் சமஷ்டி அமைப்பு முறையிலான அரசாங்கம் அமையவேண்டுமெனக் கோரியுள்ளார்கள் என்பதைப் பத்திரிகை அறிக்கையில் இருந்து அறியக் கூடியதாக இருக்கிறது. அவர்களது சமஷ்டி பற்றிய விவாதம் பின்வரும் அடிப்படையிலமைந்திருந்தது.

சமஷ்டி முறையிலான அரசாங்கமே நாட்டுக்கு உகந்தது. இலங்கைக்கு இந்த அரசியல் அமைப்பே பொருத்தமானதாகும். தமிழ் மக்களின் ஒருமைப்பாட்டுக்கும் அவர்களது வளர்ச்சிக்கும் இந்த அரசியல் அமைப்பே இன்றியமையாததொன்ருகும். ஆட்சிமன்றத்தில் சமஷ்டிக்கட்சி அங்கத்தவர்கள் 13 பேர் இருக்கிருர்கள் என நினைக்கிறேன். ஆட்சிமன்றத்தில் வேறும் தமிழ் அங்கத்தவர்கள் இருக்கிருர்கள். இவர்கள் சமஷ்டி அரசியலை எதிர்ப்பவர்கள் ஒற்றையாட்சி முறையை விரும்புகிறவர்கள்.

இந்த அரசியல் அமைப்புகள் குறித்து மதிப்பீடு செய்வது இக்கட்டுரையின் நோக்கமல்ல. நாட்டினதும் நாட்டின் தமிழ்ச் சமூகம் உட்பட பல்வேறு சமூகங்களினதும் நலன் கருதி இவைகள் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஆட்சிமன்றத்திலுள்ள சமஷ்டி அங்கத்தவர்கள் தாங்கள் சமஷ்டியை விரும்பிய தங்களது தொகுதிகளால் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் திருப்தியடைகிருர்கள். மற்ற தமிழ் அங்கத்தவர்கள் ஒற்றையாட்சியை விரும்பியவர்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக திருப்தியடைகிருர்கள். ஆட்சிமன்றத்திலுள்ள சகல சிங்கள அங்கத்தவர்களும் தங்களது தேர்தல் தொகுதிகளும் தாங்களும் ஏகமனதாக சமஷ்டி அரசமைப்பை எதிர்த்துள்ளதாகத் திருப்தி அடைகிருர்கள், தற்போதைய சூழலில்இவை சர்ச்சைக்குரியவிடயமாகும், முஸ்லிம் அங்கத்தவர்களும் தாங்களும் தங்கள் தொகுதிகளும் சமஷ்டி முறையிலான அரசாங்கத்தை எதிர்ப்பதாகத் திருப்தியடைகிருர்கள்.

இலங்கையிலுள்ள இந்தியத் தமிழர்களும் காலத்துக்குக்காலம் தங்கள் நிறுவனங்கள் மூலமும பிரதிநிதிகள் மூலமாகவும் தாங்கள் சமஷ்டி அரசை விரும்பவில்லை என்பதைத் தெரிவித்துள்ளார்கள். பறங்கியர் சமூகத்தைச் சேர்ந்த அங்கத்தவரோ அல்லது அவர்களது நிறுவனங்களோ சமஷ்டி அரசியல் அமைப்புக்கு விருப்பம் தெரிவித்துள்ளதாகத் தெரியவில்லை.

அரசியல் நிர்ணயசபையிலும் ஆட்சிமன்றத்திலும் நாட்டிலும் சமஷ்டிக்கொள்கைக்கு உள்ள எதிர்ப்பையும் ஆதரவையும் ஆராய்ந்தது போன்று மாறுபட்ட கருத்துக்களால் நாட்டில் தற்போது எழுந்துள்ள கஷ்டங்களுக்கு ஒருமைப்பாட்டுடன் அமைந்ததொரு முடிவுக்குவர மற்றும் சிலரிடையே நிலவும் பின்வரும் கருத்துக்களையும் ஆராய்தல் அவசியமாகும். இத்தகைய ஆய்வு முறை தற்காலத்துக்கு மட்டுமன்றி எதிர்காலத்துக்கும் இலங்கைக்குக் குறிப்பாகத் தமிழ் சமூகத்துக்கு அவசியமாகும்.

(தொடரும்)

## நவராத்திரி விழா

திருநெல்வேலி, வெள்ளி

கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நவராத்திரி பூசை வெகு சிறப்பாகத் தினமும் கொண்டாடப்படுகிறது, 8-ம் திருநாளான வியாழக்கிழமைமாலை விசேட பூசையும் ஆராதனையும் நடைபெற்றன. அப்போது கலாசாலை அதிபர் தலைமையில் விசேட நிகழ்ச்சிகள் இடம்பெற்றன

விரிவுரையாளர் வித்துவான் ப. கணபதி சக்தியின் மகிமையை எடுத்துக் கூறினுர். இதைத் தொடர்ந்து கலாசாலை விரிவுரையாளர்

யுத்தத்தை தவிர்ப்பதில்

# 25 ஆண்டுகளில் ஐ. நா. செய்துள்ள அளப்பரிய சேவை

உலக நாடுகளின் அரசியல் அரங்காக விளங்கும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் தனது 25 வருடப் பூர்த்தி விழாவை இம்மாதம் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறது. இவ்வைபவம் குறித்துக் கூட்டப்படவிருக்கும் ஐ. நா. பொதுச்சபையின் விசேஷ மகாநாட்டில் உலக நாடுகளின் தேசத் தலைவர்கள் பலர் பங்குபற்றிச் சிறப்பிப்பார்கள். இக் கொண்டாட்டங்கள் அக்டோபர் 24ந் திகதியுடன் முடிவடைகின்றன. இத்தினத்தில்தான் கால்நூற்றுக் காலத்திற்கு முன்னர் ஐ. நா. சாசனம் அமுலுக்கு வந்ததென்பது குறிப்பிடத்தக்கது

1945ம் ஆண்டு ஜூன் மாதம் 26ந் திகதி 50 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் சான்பிரான்சிஸ்கோ நகரில் கூடி இந்தச் சரித்திரப் பிரசித்திவாய்ந்த சாசனத்தில் கைச்சாத்திட்டனர் இன்று மொத்தம் 126 நாடுகள் இந்த உலக ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கின்றன. இவற்றில் பெரும்பான்மையான நாடுகள், ஆசிய, ஆபிரிக்கக் கண்டங்களைச் சேர்ந்தவை. இவை ஐ. நா. பொதுச்சபையில் நிறைவேறிவரும் அரசியல் தீர்மானங்களைப் பார்க்குமிடத்து ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் ஆதிக்கம் எந்த அளவில் வளர்ந்திருக்கிறது என்பது தெளிவாகும். அது மட்டுமின்றி அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் சமூக, பொருளாதாரப் பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் நோக்கமாக ஐ. நா. உதவி நிறுவனங்கள் பல உருப்பெற்றிருப்பதும் இங்கு குறிப்பிடற்பாலது.

### உலக சமாதானம்

''மனித குலத்தை, இரு தடவைகள், கோரமான அழிவுகளுக்கு இலக்காக்கிய யுத்த பயங்கரத்திலிருந்து எதிர்காலப் பரம்பரையினரைக் காப்பாற்றுவதென ஐக்கிய நாடுகள் சபை மக்களாகிய நாம் பிரதிக்ஞை எடுத்துக்கொள்கிறேம்''- இது ஐ. நா. களுக்கும் மத்தியில் நீண்டகாலமாக நிலவிவந்த நெருக்கடி நிலைமையைப் பெருமளவு தணித்து அணு ஆயுதப் பரிகரணத்தில் குறிபபிடத்தக்க முன்னேற்றம் காண்பதற்கு ஏதுவாக இருந்தது ஐ. நா. சபைதான் என்பதை எவரும் மறுக்கமுடியாது. அணு ஆயுதப் பரிகரணம் சம்பந்தப்பட்டமட்டில் ஐ. நா. சபை வாயிலாக இரு முக்கிய ஒப்பந்தங்கள் ஏற்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இதில் ஒன்று, அணு ஆயுதப் பரீட்சைத் தடை ஒப்பந்தம். இதன் பிரகாரம் வான மண்டலத்திலும், நீருக்கடியிலும் அணு ஆயுதங்களைப் பரீட்சிப்பதில்லையென வல்லரசுகள் இணங்கின. அடுத்தது அணு ஆயுத இரகசியங்கள் பரவாமல் தடுக்கும் ஒப்பந்தம். இந்த ஒப்பந்தத்தில் வல்லரசுகளுடன் சேர்ந்து பல உலக நாடுகள் கைச்சாத்திட்டுள்ளன.

### அபிவிருத்திக்கு உதவி

சர்வதேச ஒத்துழைப்பு மூலம் பின் தங்கிய நாடுகளின் சமூக, பொருளாதார சுபீட்சத்திற்கு உழைப்பதும் ஐ. நா ஸ்தாபனததின் பிரதான இலட்சியங்களில் ஒன்ருக இருந்து வருகிறது. உதவி நல்கும் நாடுகளும் உதவி பெறும் நாடுகளும் ஒன்ருகக்கூடி பரஸ்பரம் கலந்துறவாடும் ஒரு உலக அரங்காக ஐ நா. சபை விளங்குவது மட்டுமன்றி தனது விசேஷ ஏஜன்ஸிகள் மூலமும், கிளை நிறுவனங்கள்மூலமும் ஐ. நா. ஸ்தாபனம் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு அளப்பரியஉதவிகளைச் செய்து வருகிறது. சுகாதாரம், விவசாயம், கைத்தொழில் அபிவிருத்தி, தொழில்நுட்ப உதவி, கல்வி வளர்ச்சி போன்ற பல்வேறு துறைகளில் ஐ. நா, ஸ்தாபனத்தின்சிறப்பான சேவை மெச்சத்தக்கது.

இன்றைய உலக நெருக்கடிகள் மத்தியிலும் பூசல்கள் மத்தியிலும் மனித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிக்க மக்கள் மத்தியிலும் எதிர்ப்பையும் அதிருப்தியையும் சம்பாதித்துள்ளது. அடுத்த தேர்தலும் நெருங்கிக்கொண்டிருக்கிறது. இந்நிலையில் இந்தோ சீனுவில் அமெரிக்கா தொடர்ந்து தன்னைச் சிக்கவைத்துக் கொண்டிருப்பதன் மூலம்

அனுமதித்து அதன்பின்னர் திரு. நிக்ஸன் கூறுவது போன்று ஜெனிவா வகையான சர்வதேசமகாநாட்டில் சீனுவையும் சேர்த்துப் பேச்சுவார்த்தை நடத்தினுல் அதில்தான் சரியான பயன் கிடைக்குமென்று நம்பலாம்.

அகில இலங்கை

## மல்யுத்த போதனையாளர் வடமராட்சி வருகிறுர்

அம்பன், வெள்ளி

வடமராட்சி வடக்குக் கிழக்குக் காரியாதிகாரி திரு மு. தம்பிமுத்துவின் அழைப்பின் பேரில் அகில இலங்கை மல்யுத்தப் போதனையாளர் திரு டி. டி. என். பெரேரா பருத்தித்துறைக்கு விஜயம் செய்யவிருக்கின்ருர். இவர் மேற்படி காரியாதிகாரி பிரிவினுல் நடத்தப்பெற்ற மல்யுத்தப் போட்டிகளில் வெற்றியீட்டிய வீரர்களுக்கு இம் மாதம் 21, 22-ம் திகதிகளில் நவீனமுறையில் மல்யுத்தம் புரியும் செயற்கைப் பயிற்சியையும் போதனையையும் நிகழ்த்தவிருக்கின்ருர். இவர் தலைமையில் மல்யுத்தப் போட்டிகளும் இடம்பெறவிருக்கின்றன.

மேற்படி போட்டிகள் யாவும் பருத்தித்துறை பஸ் நிலைய முன்றலில் அமைந்த வீரவாகு கட்டிடத்திலேயே நடைபெறும் இதற்கானஏற்பாடுகளை வடமராட்சிப் பகுதி விளையாட்டுப் போதஞசிரியர் திரு எஸ். கதிர்காமத்தம்பி கவனித்து வருகின்ருர்.

## இன்று இசை அரங்கேற்றம்

திருநெல்வேலி, சனி

சங்கீதவித்துவான் செல்வி அன்னலட்சுமி முத்தையாவின் இசை அரங்கேற்றம் இன்றுமாலை 6 மணியளவில் திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தி விநாயகர் ஆலய முன்றலில் நடைபெறவிருக்கிறது.

இவர் சென்னை கர்நாடக இசைக் கல்லூரி பேராசிரியர் சங்கீத வித்வான் தஞ்சாவூர் திரு ரி. எம், தியாகராஜன் இசைமணி திருவாரூர் திரு ரி. என். நமசிவாயம் ஆகியோரிடத்தில் சங்கீதம் பயின்றவர்.

யாழ் சைவமுன்னேற்றக் கழகத்தின் ஆதரவில் நடைபெறும் இவ்வரங்கேற்றத்தில் கலையரசு சொர்ணலிங்கம், இசைப்புலவர் திரு என் சண்முகரத்தினம், நல்லூர் எம். பி. திரு சி: அருளம்பலம் யாழ் உதவிமேயர் திரு ஆ. துரைராசசிங்கம் இளைப்பாறிய மலாயா கல்வி அதிகாரி திரு எஸ். செல்வநாயகம் வழக்கறிஞர் திரு கே. பரமசிவம்பிள்ளை ஆகியோர் ஆசியுரை வழங்குவார்கள்.

## வல்லிபுர ஆலய உற்சவம்

அம்பன், வெள்ளி

வல்லிபுரக் கோயில் கதவுகள் மூடப்பட்ட போதிலும் வழமைபோல் உற்சவங்கள் நடைபெற்று வருகின்றன. தேரும், தீர்த்தமும் 13-ம் 14-ம் திகதிகளில் நடைபெறும். வெளிமண்டபத்தில் நின்றே பூஜைகள் அர்ச்சனைகள் செய்து வழிபட்டுச் செல்கின்றனர். ஆலய உற்சவம் முடியும் வரையும் கோவிலடியில் அமைக்கப்பட்டிருக்கும் பொலிஸ் நிலையம் தொடர்ந்து இயங்கும்.

## புதிய நிர்வாகிகள்

நல்லூர், வெள்ளி

புத்தூர் ஆவரங்கால் மேற்கு சர்வோதய சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். தலைவர் திரு. எஸ். கே சின்னராசா உபதலைவர் திரு க. இராமையா, பொதுச்செயலாளர் திரு. க. திரவியம், உபசெயலாளர் திரு. க. கார்த்திகேசு. பொருளாளர் திரு. க பொன்னையா.

விளையாட்டுத்துறைஅமைப்பாளர்கள் திரு. வி. கந்தசாமி, சி. யோகநாதன், 7 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

சிகள் இடம்பெற்றன

விரிவுரையாளர் வித்துவான் ப. கணபதி சத்தியின் மகிமையை எடுத்துக் கூறினுர். இதைத் தொடர்ந்து கலாசாலை விரிவுரையாளர் சங்கீதபூஷணம் நடராசாவினது இன்னிசைக் கச்சேரியும் நடன விரிவுரையாளர் திரு வேல் ஆனந்தனுல் ஒழுங்கு செய்யப்பட்ட திருநெல்வேலி கலைக்கோயில் மாணவிகள் நாட்டியநிகழ்ச்சியும் இடம்பெற்றன. மாணவர்களும் பொதுமக்களும் திரளாக வந்து இந்நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்தனர்.

0 0

யாழ்ப்பாணம், சனி

கொட்டடி ஸ்ரீ ஞான வைரவர் கோவில் கொட்டடி இந்து இளைஞர் சங்கத்தினுல் நவராத்திரி விழா இன்று மாலை கொண்டாடப்படுகிறது. எஸ். வடிவேலு குழுவினர் காரைக்கால் அம்மையார் என்னும் பொருள்பற்றி வில்லுப்பாட்டு நிகழ்த்துவார்கள்.

0 0 0

சித்தங்கேணி, சனி

வட்டுக்கோட்டை கலைமகள்கலைக்குழுவின் ஆதரவில் வட்டு, வீரபத்திர சிவன் கோயில் வீதியில் அமைக்கப்பெற்ற அரங்கில் இன்று மாலை 6 மணிக்கு கலைமகள் விழா நடைபெறவிருக்கிறது.

ஆசிரியர் மு சு. வீரசிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் உரையரங்கில் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி அதிபர் திரு. என். சிவஞானம், ஆசிரியர் திரு. கா. துரைசிங்கம் 'ஈழநாடு' உதவி ஆசிரியர் திரு. மயிலை சிவ சண்முகதாசன் ஆகியோரும், கருத்தரங்கில் செல்வன்கள் ஐ. தேவானந்தன் செ. செல்வராசா, க. சரவணபவன். ஆகியோரும் இசையரங்கில் ஞானசம்கோதரிகள், சிவம் குழுவினரும் நாடகங்களும் நடைபெறவிருக்கின்றன.

0 0 0

புலோலி, சனி

துன்னலை தெற்குதயாநிதி கிராமமுன்னேற்றச் சங்கமும், சனசமூகநிலையம் நடாத்தும் இராப்பாடசாலை மாணவர்களும் முதியோர் கல்வி வகுப்பில் கல்விகற்கும் முதியோரும் சேர்ந்து சரஸ்வதி பூசையை இன்று கொண்டாடுகிருர்கள் அதில் பிரதம அதிதியாகச்சிறுபான்மைத் தமிழர் மகாசபை வடமராட்சி கிளைத் தலைவர் திரு. என். செல்வப்பாக்கியம் (ஆசிரியர்) நவராத்திரி விழாவின் மகிமையைப்பற்றிப் பேசுவார் இராப் பாடசாலைமாணவர்கள் கதம்ப நிகழ்ச்சி நடத்துவர்.

நாயகம் சமஷ்டிக் கொள்கையை ஆதரித்து நம்பிக்கை யூட்டக்கூடிய

ப்பவர்கள் ஒற்றை ஆட்சி முறையை விரும்புகிறவர்கள்.

துக்கு மட்டுமன்றி எதிர் காலத்துக்கும் இலங்கைக்குக் குறிப்பாகத் தமிழ் சமூகத்துக்கு அவசியமாகும்.

(தொடரும்)

# யாழ்ப்பாணத்தில் சாரணர் சேவை!



உலகத்தில் மக்களின் சேவையை நாளும் பொழுதும் செய்கின்ற இயக்கமாக விளங்குவது சாரணர்இயக்கமாகும். சாரணர் இயக்கம் உலகத்தின் எப்பகுதியிலும் நிலைபெற்றுஇயங்குகின்றது.

இதற்கு அடிப்படையாக அமைவது சொல்லும் செயலும் என்ற இவ்வியக்கத்தினர் செயல்படுவதாகும்.

மக்களுக்கு அத்தியாவசியமானதும் உண்மையானதுமான இவ்வியக்கத்தின் ஒரு பகுதியாக மிளிர்வது யாழ்ப்பாணப் பிராந்திய சாரணர் இயக்கம்.

கடந்த சில வாரத்துக்கு முன்னர் யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் நடைபெற்ற சாரணர் இயக்க மாநாட்டிற்குச் சென்றிருந்தோர் சாரணர் இயக்கத்தின் சேவையையும், அவர்தம் அயர்வற்றதொண்டையும்கண்டிருக்கமுடியும்.

உற்சாகம் சேவையாற்றும் மனுேநிலை, சேவையில் மகிழ்ச்சி காணும் பண்பு இவை அனைத்தையும் ஒவ்வொரு சாரணியனும் கொண்டிருந்தான்.

பலபாடசாலைகளின் சாரணர் இயக்கத்தினர் தனித்தனியாக அங்கு முகாமிட்டிருந்தனர். தாம் செய்கின்ற எத்தகைய கடினமான தொண்டையும் பொருட்படுத்தாதவர்களாக தொண்டிலேயே இன்பம் காணுகின்ற அவர்களை யாம்அங்கு காணமுடிந்தது.

சமுதாயத்தில்இன்றைக்கு சாரணர்இயக்கத்தினர்செய்கின்றசேவை அலசியவாகின்றது என்பதை யாம் எளிதில் புரியக்கூடியவாறு அவர்தம் சேவை இருந்தது. எவருக்கும் சேவை செய்ய கனிந்த மனத்துடன் காத்திருக்கின்றனர். இதற்குஸ்தாபகரான சேர் பேடன்பவல் அவர்கள் அன்னுள் வகுத்த திட்டங்கள்தான் காரணமென்பதை எவரும் மறுக்கமுடியாது.

அன்றைய விழாவிலே ஒவ்வொரு சாரணியனும் மிகவும் பொறுமையுடனும் கடமையுணர்ச்சியுடனும் தன் காரியங்களைச் செய்தான்.

வெயில் மழை என்றஇயற்கையின் தாக்கத்தைப் பொருட்படுத்தவில்லை. சூழ்நிலையின் ஆபத்தை பொருட்படுத்தவில்லை. எதற்கும் துடித்துக்கொண்டு முன்நின்ருன். எந்தச் சமயத்திலும் எந்த வீட்டிலும்சென்று எந்தச் சேவையையும் புரியச் சித்தமுடையவஞக விளங்குகின்ருன்.

இந்தஇயக்கத்தைச் சேர்ந்தவர்கள் நல்லவர்களாக வருங்காலத்தில் உருவாக முடியும் என்பதை யாம் அவதானிக்கமுடியும்.

கடினவேலைகளை செய்கின்ருேமே, ஒருகரியத்தைச் சாதிப்பதற்காக சிரமப்படவேண்டியிருக்கின்றதே என்றெல்லாம் அவர்கள் கடுகத்தனையும் சிந்திக்கவில்லை. அவர்களின் முகாம்களிலே இன்னிசை வாத்தியங்கள் முழங்கின. இனிய கானம் எழுந்தது. தம்மை மறந்த உற்சாகத்துடன்செயல்புரிந்தனர், ஆனுல் எப்போதும் சேவைக்காக வெளியேறவும் சித்தமுடையவராகவே இருந்தனர்.

இத்தகைய பண்புகள் பொதுவாக யான் கண்ட யாழ்ப்பாணப்பகுதி சாரணியனுக்கு மட்டும் உரியதல்ல. பொதுவாக எந்தப் பகுதியிலுள்ள சாரணியனுக்கும் உரியபொதுநியதி இதுவே...

ஆயினும் யாழ்ப்பாணப் பிராந்தியத்தின் சாரணிய இயக்கத்தின் வளர்ச்சிக்கும் அதன் ஆக்கபூர்வமான செயல்களுக்கும் காலத்துக்குக்காலம் ஒத்துழைத்தவர்களின் சேவையும் காரணமாக அமைந்துள்ளதென்பதை யாம் சுட்டிக்காட்டாமலிருக்கமுடியாது.

யாழ்ப்பாணப்பிராந்தியத்தில் இவ்வியக்கம் ஆரம்பமாகி ஏறத்தாழ 54 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டன அகில இலங்கை ரீதியான சாரணீய இயக்கத்தின் போட்டிகளில் யாழ்ப்பாண பிராந்திய சாரணீய இயக்கத்தினர் அவ்வப்போது தக்க பரிசுகளைப் பெற்றனர்.

வடமாநில கல்வி அதிபதி இவ்விழாவில் கடந்தகாலத்தைய சாரணீய இயக்கத்தினரின் சேவையையும் சாரணீய இயக்கம் உறுதியுடன் வளர கலாசாலைகளின் ஆசிரியர்கள் உறுதுணையாகவிருந்துள்ளமையையும் குறிப்பிட்டார்.

கடந்தமாதம் 20ந் திகதி தொடக்கம் 22ந் திகதிவரை நடந்த இவ்விழாவில் கூடாரம் அமைத்தல், கட்கேட்ஸ் போடுதல். தீயிடல், ஏணிகட்டுதல், வைக்கோல் வீடுகள் போடுதல் இவற்றையெல்லாம் வெகு செப்பமாகச் செய்து காட்டினர். சௌக்கிய இலாகா அதிகாரிகள், அதிபர்கள் அந்தமுகாங்களை அடிக்கடிசென்று பார்வையிட்டனர். அவர்களதுகுறிப்பின்படி முகாங்கள் சுகாதார அமைப்புள்ளவையாக விளங்கின என்பது தெரிவிக்கப்பட்டது.

இந்த விழாவை வடமாகாண சாரண இயக்கக்கமிஷனர் திரு. ஜே. இ. அரசரத்தினம், சாரணசபைக்காரியதரிசி திரு. ஜே. என். பொன்னையா, நிர்வாகக் காரியதரிசி திரு. ஆர் ஈ. இராஜநாயகம் ஆகியோர்களின் பேருழைப்பின் பயனுக உருவாக்கப்பட்டதாம்.

கு. வி மகாலிங்கம்.

## உள்ளத்தில்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏன் சிங்கத்தில் ஏறுகின்ருள் எம்உள்ளமெல்லாம் சிங்க ஏறுபோல் இருக்கவேண்டும் அதுவே துர்க்கை பூசை பாரதிதாசன் எல்லோரும் கல்விகற்று... என்று பாடுகின்ருர் அதுவே நவராத்திரிபூசையால் ஏற்படவேண்டும். கல்வி உத்தியோகத்துக்கு மாத்திரம் கற்காது வாழ்வை வழமாக்கவேண்டும் என்ற நோக்கமிருக்க வேண்டும் அதுவே வாணியின் பூசையாகும். முச்சத்தியின் உண்மையான நோக்கங்களை கொண்டவர்களாக நாம் வாழ்வோம்.

ஈழநாடு உதவி ஆசிரியர் திரு. மயிலை சிவசண்முகதாசன் உட்பட மற்றும் பலரும் பேசினர்.

அழிவுகளுக்கு இலக்காக்கிய யுத்த பயங்கரத்திலிருந்து எதிர்காலப் பரம்பரையினரைக் காப்பாற்றுவதென ஐக்கிய நாடுகள் சபை மக்களாகிய நாம் பிரதிக்ஞை எடுத்துக்கொள்கிருேம்''- இது ஐ. நா. சாசனத்தின் ஆரம்ப வார்த்தைகள் சில. யுத்தக் கொடுரத்திலிருந்து மனித வர்க்கத்தைக் காப்பாற்றி உலக சமாதானத்திற்கு வழிகோலுவதுதான் இந்த உலக மகாசபையின் அடிப்படையான உன்னத இலட்சியமாகும். கடந்த 25 வருட காலத்தில் ஐ. நா. ஸ்தாபனம் அளப்பரிய சாதனைகளையும் ஈட்டியிருக்கிறது. அத்துடன் சில தோல்விகளையும் எதிர்நோக்கியிருக்கிறது. எனினும் பொதுப்படையாகப் பார்க்குமிடத்து யுத்தத்தைத் தவிர்ப்பதில் இந்த நிறுவனம் ஆற்றிய பணி மகத்தானது என்றே சொல்லவேண்டும்.

சைப்பிரஸ் நெருக்கடி, இந்திய-பாகிஸ்தானிய யுத்தம், மத்திய கிழக்குப்போர் போன்ற பயங்கரச் சூழ்நிலைகள் உலக யுத்தமாக வெடிக்காமல் தடுத்து நிறுத்திய பெருமை ஐ. நா.வையே சாரும். மத்திய கிழக்கு நெருக்கடி சம்பந்தப்பட்ட மட்டில் ஐ. நா. பந்தோபஸ்துசபை நிறைவேற்றிய தீர்மானமே இப்பிராந்தியத்தில் நிரந்தர சமாதானத்திற்கு வழிகோலும் மார்க்கம் என்பதைப் பெரும்பாலான உலக நாடுகள் ஒத்துக்கொள்கின்றன.

சோவியத் யூனியனுக்கும் மேற்கத்தைய வல்லரசு

தொழில்நுட்ப உதவி, கல்வி வளர்ச்சி போன்ற பல்வேறு துறைகளில் ஐ. நா, ஸ்தாபனத்தின்சிறப்பான சேவை மெச்சத்தக்கது.

இன்றைய உலக நெருக்கடிகள் மத்தியிலும் பூசல்கள் மத்தியிலும் மனித சமுதாய சுபீட்சத்திற்கென உன்னத இலட்சியங்களுடன் ஒரு உலகஸ்தாபனம் இயங்கிவருவது பலராலும் வரவேற்கப்படவேண்டிய விஷயமாகும். தொடர்ந்து இந்த ஸ்தாபனம் பலம் பொருந்தியதாக உலக சமாதானத்தில் நம்பிக்கையாக சிறப்புடன் இயங்கி வரவேண்டுமென்பதே சகல அங்கத்துவ நாடுகளினதும் அபிலாசையாகும்.

## ஜீப் வண்டியில் சென்றவர் யார்

கொடிகாமம் சனி

எழுதுமட்டுவாள் வடக்கிலுள்ள கனிக்கரை எனப்படும் கிராமத்திலுள்ள வீடொன்றில் ஒரு ஜீப்வண்டியில் சென்ற சிலர் உட்சென்று அங்குள்ளவர்களைப் பயமுறுத்தினர். அவர்களில் சிலர் இளம்பெண்கள் எனவும் கூறப்படுகிறது. சுமார் பத்துப்பேர் மட்டில் ஜீப்பில் இருந்ததாகவும் தெரிகிறது

## யாருடையது?

திருநெல்வேலிச் சந்தியில் பேர்சோடு கூடிய திறப்புக் கோர்வையை பி. வேல்முருகன் கண்டெடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர்கள் தக்க ஆதாரத்துடன் வந்து பெற்றுக்கொள்ளலாம்.


இன்று முதல் குதூகல ஆரம்பம்!

தீபாவளி மலிவு விற்பனை

(10-10-70 — 29-10-70)

S. R. S.

ஜவுளி மாளிகை

உங்கள் தீபாவளி ஜவுளிகளைத் தெரிவு செய்ய இன்றே விஜயஞ் செய்யுங்கள்

எஸ். ஆர். செல்லத்துரை

216, கே. கே. எஸ். ரேட் — யாழ்ப்பாணம்

போன்: 296


இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 53-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org